பக்கங்கள் 16 Registered as a News paper விலை ரூபா 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 27 10-05-2002 வெள்ளிக்கிழமை ஓசை 81

உங்கள் அவசர தேவையை முன்னிட்டு தரமான கறுப்பு வெள்ளைப் படங்களை அரை மணி நேரத்தில் பெற்றுக்கொள்ள,

லைவ் ஸ்ருடியோ

உங்கள் அனைத்து கலர் படங்களும் கவரிடப்பட்டு (லெமனேற்றிங்) வழங்கப் படுகிறது.

வாழ்நாள் படப்பிடிப்பகம்
மல்லாவி
(1762)

# செயற்படுத்தவேண்டியவை பற்றிப் புலிகள் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் விபரிப்பு!

## நேற்று நடைபெற்ற சந்திப்பில் தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்

(கிளிநொச்சி)

ஏ - 9 வீதியை மக்கள் பாவனைக்கு வாரத்தின் ஏழு நாட்களும் திறந்து விடுதல், மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டு வரும் கெடுபிடிகளை நீக்குதல், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறுதல் போன்ற விடயங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். இவற்றை நடைமுறைப்படுத்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

நேற்றுப் பகல் 11.00 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் வன்னிக்கு வருகைதந்த போர் நிறுத்தக் கண்காணிப்புகுழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொண்ட்புறூஹெளவ்டே அவர்கள் தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் நடுவப் பணியக நிர்வாகப் பொறுப்பாளர் சோ. தங்கன், அரசியல்துறையைச் சேர்ந்த புலித்தேவன் ஆகியோரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சனிக்கிழமை இந்தியா பயணமாகிறார்.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் முகமாகவே இப்பயணம் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதன் போது சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்தும் அவர் பேசவுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## — முல்லை. வலய கல்விப்பணிமனைக்கு —
# வழமையான ஒதுக்கீடுகள் கூட ஐந்துமாதங்களாகக் கிடைக்கவில்லை

(புதுக்குடியிருப்பு)

கடந்த ஐந்து மாதங்களாக முல்லை வலயக்கல்விப்பணிமனைக்கு வழமையாகக் கிடைக்கும் ஒதுக்கீடுகள் கூட கிடைக்கவில்லைஎன முல்லை வலயக்கல்விப்பணிமனை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளைசென்றவருடம் முடிந்த வேலைகளுக்கான கொடுப்பனவுகளுக்குரிய காசோலையும் மாகாணக் கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் ஒப்பந்தகாரர்கள் வலயக்கல்விப்பணிமனைக்கு தொடர்ந்து வருகை தந்து கொண்டிருப்பதால் பெரும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (08)

## வெற்றிபெற ஒத்துழைக்கும்

சமாதான முயற்சிகளை சீர் குலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு மத்தியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடுநிலையில் நின்று சமாதான முயற்சிகள் வெற்றி பெற முழுமையாக ஒத்துழைக்கும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்று சமா

(16ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் இயங்கும்

தற்போதைய சமாதான சூழ்நிலையை அடுத்து பளைப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருவதை யடுத்து இப் பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை இயங்கவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கிளி - முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டுக்குச் செல்லும் நுழைவாயிலாகஇப் பகுதி இருப்பதால் நோய்

(16ஆம் பக்கம் பார்க்க)

## — ஏனைய மாவட்டங்களில் —
# தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள சுகாதார ஊழியர்களை விடுவிக்குக
## கிளி.,-முல்லை பிரதி சு. சே. பணிப்பாளர் கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

ஏனைய மாவட்டங்களில் தற்காலிக இணைப்புச் செய்யப்பட்ட கிளி-முல்லை சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களை தனது பிரதேசங்களுக்கு விடுவித்து உதவுமாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கிளி-முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சிவமோகன் அவர்கள் அவசர வேண்டுகையை விடுத்துள்ளார்.

கிளி - முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரிவைச் சேர்ந்த பல தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள், பொது சுகாதார உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள் நீண்டகாலமாக வவுனியா, மன்னார் உட்பட

(16ஆம் பக்கம் பார்க்க)

## — யாழ். தீவகப்பகுதியில் —
# இயந்திரப்படகுகளில் மீன் பிடிக்கத்தடை

யாழ். தீவகப்பகுதியில் இயந்திரப் படகுகளில் மீன் பிடிப்பதற்கு சிறிலங்கா கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

சிறிலங்கா கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இதற்கான அறிவிப்பை நேற்று விடுத்தார்.

கடற்தொழில் நீரியல் வள பிரதியமைச்சர் முஹைதீன் அப்துல் காதர் மேற்படி விடயம் குறித்து தொலைபேசி வாயிலாக கடற்படை தளபதியுடன் தொடர்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## — சிறிலங்கா இராணுவம் —
# மட்டு., யாழ்ப்பாணத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை

மட்டக்களப்பு, யாழ். மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவத்துக்கு ஆட் திரட்டும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை செங்கலடி, சித்தாண்டி, வந்தாறுமூலை, மாவடிவேம்பு, ஏறாவூர் போன்ற இடங்களில் படையினரின் வாகனத்தில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி மூலம் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நோக்கு

விடுதலைப்புலிகளுக்கும், ஐ. தே. மு. அரசாங்கத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து நிதி உதவி குறித்து நடத்திய பேச்சுவார்த்தைகள் வரை, இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாம் ''நாட்டின் இறைமையை மீறும் செயல்கள்'' என்பது சிங்கள எதிர்க்கட்சிகளின் முடிவாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் முயற்சிகள் என்பது அவர்களின் வாதம்.

ஆனால், உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு அமைப்புகள் தலையிடும் சூழலை உருவாக்கியவர்களே இவர்கள்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை மறுத்து அவர்களை இராணுவரீதியில் அடக்கியொடுக்கிவிட எடுத்த முயற்சிகளே இந்நிலைக்கு அவர்களை இட்டுச் சென்றுள்ளது.

இதுஒருபுறமிருக்க. ஐக்கிய தேசியக் கட்சியும் சரி பொ. ஐ. முன்னணியும் சரி தம்முள் எழும்பிரச்சினைகளைக் கூட, வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அமைப்புகளுக்கும்முறையிடுவதேவழமை.

அண்மையில்கூட பொதுசன ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்கள் மீதும் உறுப்பினர்கள் மீதும் ஐ. தே. மு. அரசாங்கம பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் 15பொ. ஐ. மு பாராளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யமுயற்சிப்பதாகவும் பொ. ஐ. மு. வெளிநாட்டு அமைப்புக்களுக்கு முறையிடு செய்ததுதேர்தல் காலங்களில் இடம்பெறும் வன்முறைகள் மோசடிகளில் கூட தலையிடுமாறு வெளிநாட்டு அமைப்புகளுக்கு கோரிக்கை விடப்பட்டன.

ஆனால் இவையெல்லாம் இறைமை மீறும் செயல்களாக சிங்கள எதிர்க்கட்சிகளுக்குத்தெரிவதில்லை. ஆனால், இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண மத்தியஸ்தம் வகிப்பது மட்டுமே இறைமை மீறும் செயலாக தெரிகிறது. இவர்களின் இந்தக் கூக்குரலுக்கு அவர்கள் கடைப்பிடிக்கும் இனவாதக்கொள்கையே காரணமாக அமைகிறது என்பது வெளிப்படை.

முல்லை. மாவட்ட சி. க. கூ. சமாசம்

# பதவி வெற்றிடம்

முல்லை. மாவட்ட சி: க: கூ: சமாசம் காசாளர் பதவிக்கான விண்ணப்பத்தை 2002-05-01ம் திகதி கோரியுள்ளது: தகைமையுடைய விண்ணப்பிக்க விரும்புவோர் 2002-05-18ம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ தலைவர் சி. க. கூ. சமாசம் கற்சிலைமடு ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரைக் குறிப்பிடவும். முல்லை மாவட்டத்தில் வசிக்கும் 24 தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். சேவையில்உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. தகுதியற்ற விண்ணப்பங்கள் நேர்முகத் தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது;

01) காசாளர் பதவி 306/12
சம்பள அளவுத் திட்டம் 4250 - 5950 / 80X10 - 90X10

**கல்வித் தகைமைகள்**

01) கூட்டுறவுப் பணியாளரின் 13ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்/ 14ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

02) கூட்டுறவுப் பணியாளரின் உயர்தரம் / க. பொ: த: உயர்தரம் மூன்று பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் காசாளர் / விற்பனை சம்பந்தப்பட்ட வேலைகளில் இரு வருட அனுபவம்.

03) கூட்டுறவுப் பணியாளர்கள் சாதாரணதரப் பத்திரம் / க. பொ. த: சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களுடன் கூடிய சித்தி. இது இரு அமர்வுகளுக்கு மேற்படாததாக அமைய வேண்டும். வர்த்தக நடவடிக்கைகளில் நான்கு வருட அனுபவம்;

- தெரிவு செய்யப்படுவோர் உடன் 10 000/- பிணைப் பணமும் ஆதனப் பிணையும் செலுத்த வேண்டும்;
- கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்;
- தொடர்ந்து ஐந்து வருடம் சேவை செய்யும் ஒப்பந்தம் ஒன்று செய்தல் வேண்டும்;

தலைவர்,
சி. க: கூ: சமாசம்,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்;

(சி-6837)

# உணவகஉரிமம்வழங்குதல்

## புளியங்குளம் - முகமாலை

புளியங்குளத்திலும், முகமாலையிலும் அமைந்துள்ள போக்குவரவுக் கண்காணிப்பு நிலையம், ஆயப்பகுதிச் செயலகம் ஆகியன செயற்படும் இடங்களில் உணவகங்கள் அமைப்பதற்கு விருப்பமுடைய வாணிபரை 2002.05.13 ஆம் நாள் முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சி வருவாய்ப்பகுதிச் செயலகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகையுடன், நேரில் வருகைதருமாறு வேண்டுகிறோம்.

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை.

(சி-6847)

கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட விதி 18
(I) இன் கீழான

## விசேட பொதுச்சபைக் கூட்ட

# அறிவித்தல்

கிளி/தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் (வது)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. தம்பிஐயா கந்தசாமி ஆகிய நான், கூட்டுறவுச் சங்கங்கள சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அதே சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற கிளி/தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தினை 18-05-2002 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு இராமநாதபுரத்தில் அமைந்துள்ள கிளி/ தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் பணிமனையில் பின்வரும் விடயத்தை ஆராய்வதற்கு அழைக்கின்றேன்,

விடயம்:-

"கிளிநொச்சி/ தெல்லிப்பளை ப: நோ: கூ: சங்கத்தை யா/தெல்லிப்பளை ப: நோ: கூ: சங்கத்துடன் ஒன்றிணைத்தல்"

சகல பொதுச்சபை உறுப்பினர்களையும், இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்,

த. கந்தசாமி,
கூ. அ: உ: ஆணையாளர்,
கிளிநொச்சி.

(1745)

- தமிழீழ மக்களுக்கு தமிழீழ வைப்பகம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய குறுகியகால வைப்புத்திட்டம்...

## மூன்று மாதகால வைப்பிற்கு 17 வீதம் வட்டி வழங்கும் பெறுமதி மிக்க புதிய திட்டம்

- 05. 03. 2002 முதல் குறுகிய காலத்திற்கு மட்டுமே இந்த வாய்ப்பு...
- உங்கள் உழைப்பின் சேமிப்பிற்கு உயர்ந்த பாதுகாப்பும் நிறைந்த வட்டியும் பெற இப்புதிய திட்டத்தில் இணையுங்கள்...

○ வாருங்கள் - -
உங்கள் வளமான வாழ்விற்கு
வழிகாட்டுகிறோம் - -

# தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-6825)

ஈழநாதம்
# வெள்ளிநாதம்



சிற்றங் கொண்ட பூகம்பத்தின் குமுறலால எழும் எமது இனத்தின்எழுச்சிக் குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.

10.05.2002 வெள்ளிக்கிழமை

# சிறுமை கண்டு பொங்கும் குரல்கள்

இந்திய இராணுவத்தைஅனுப்பிவிடுதலைப் புலிகளின்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பிடிக்க வேண்டும் என முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசு தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் தமிழக அரசியலில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும்,இந்திய அளவிலும்கூடபெரும்கருத்து மோதல்களையும், விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளதுடன் தமிழக மக்களிடையேயும் பன்முகப்பட்ட உணர்வலைகளை ஏற்படுத்திவருகிறது.

இதன் ஓரங்கமாக அந்த தீர்மானத்தின் வரைவு நகலை எரிக்கும் போராட்டம் ஒன்றினை மக்கள் ஆதரவுச் சக்தியுடன் மேற்கொண்டு அதற்கெதிரான கண்டனத்தை தெரிவிக்க முயன்ற தமிழுணர்வாளர் பழநெடுமாறன் உட்பட பலரை தமிழக அரசு கைது செய்த நிகழ்வும் நடைபெற்றுள்ளது.

பழநெடுமாறன் சில மணி நேரத்திலேயே விடுதலை செய்யப்பட்டு விட்டார் என்பது வேறுவிடயம், ஆனால் அவரை தேசவிரோதியாகக் காட்ட முயன்ற தமிழக அரசின் தலைமையிலுள்ளவர்களின் மிரட்டல்களுக்கு அவர் அடிபணியவில்லை என்பதே இங்கு மிக முக்கியமான விடயம்.

நியாயத்தின் பக்கம் நின்று தர்மத்தின் சார்பாக குரல் கொடுப்போரையும், அநியாயத்தைக் கண்டித்து போராடுவோரையும் கைது செய்து, சிறையிலடைத்து, வழக்குப் போடுவதென்பது, ஜனநாயகவிரோத ஆட்சியாளர்களுக்கு ஒரு மனநோயாகவே போய்விட்டது தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் இது பரவலாக நடந்து வரும் விடயமேயாகும்.

ஆனால் உயர்ந்த கொள்கைவழி நிற்போர் இந்த மனநோயாளரின் நடவடிக்கைகளைப் பற்றி அக்கறை கொள்வதேயில்லை. அடுத்த தேர்தலுக்கான வியூகத்தை அமைக்கும்- பதவியைப்பாதுகாக்கும் குறிக்கோளை மையமாக வைத்துச் செயற்படும் அரசியல்வாதிகள் அது ஜெயலலிதாவானாலும் சரி கருணாநிதியானாலும் சரி காலத்தால் தூக்கியெறியப்பட்டு விடுவார்கள் என்பதற்கு கடந்த கால வரலாற்று நிகழ்வுகளே சான்றாகும்.

பழநெடுமாறன் போன்ற தமிழ் இன உணர்வாளர்கள் பதவிக் கனவுகளில் மிதக்கும் நபர்களல்ல. அவர்கள் சலுகைகள் வசதிகள மற்றும் பதவிச் சுகங்களுக்காக அநியாயசக்திகளுடன், ஊழல் பேர்வழிகளுடன் சமரசம் செய்து கொள்ளும் பலவீனர்களுமல்ல.

நியாயத்தின் பக்கம் நிற்பது தான் அவர்களின் பலம்.

அதனால்தான் அவரைக் கைது செய்து சிலமணி நேரத்தின் பின் தாங்களே விடுதலை செய்யவேண்டிய நிலை கைது செய்த தமிழக அரசுக்கே ஏற்பட்டது.

இதுவே நெடுமாறனுக்கு கிடைத்த பெரு வெற்றி எனலாம்.

இதேசமயம் இன்னொரு தமிழ்நாட்டுமனித நேய உணர்வாளரின் குரல் பற்றியும் கூறியேயாகவேண்டும்.

'அமைதி ஏற்படும் என்ற ஈழத்தமிழரின் நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டுவிடாதீர்கள் '' என்று அக்கறைமிக்க ஆதங்கத்துடன் ஒலிக்கும் இந்தக் குரலுக்குரியவர் வேறு யாருமல்ல' புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா அவர்களேயாவார்.

ஜூனியர் விகடன் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியொன்றில் 'இந்தா இருக்கிற அல்லிநகரத்திலிருந்து சென்னைக்கு நான் கிளம்பிவந்த நாள்முதலா எப்படா நம்மண்ணைமிதிப் போம்னு ஒரே நினைப்பாக இருக்கு. எங்க ஆத்தாவை போய்ப் பாக்கணும், அக்கா, தங்கச்சிங்க எப்படி இருந்தாங்களோ... எங்க சின்னாத்தாமாரு, நாலஞ்சு கிளவிங்களைப்பார்த்துவம்பு பண்ணனுமே... அப்படின்னெல்லாம் நினைப்பா இருக்கும் நினைச்சாப் போய்ச் சேரக்கூடிய மண்ணைப்பத்தியே மனசு கிடந்து மறுகும் போது, இலங்கையில இதேதமிழைப் பேசுற நம்மை விட அந்த மொழியை நல்லா காப்பாத்திற தமிழ்க் குடும்பங்கள்பற்றி எப்படி மறுகாமல் இருக்கமுடியும்?

''நாம் செய்யவேண்டிய காரியத்தை நமக்கு சம்பந்தமே இல்லாத நோர்வே நாட்டுக்காறன் செய்யுறான். ஆனால் இங்கே இருக்கிறவங்க ஆளாளுக்கு ஒரு அபிப்பிராயம் சொல்லி திரண்டுவாற தாளியை உடைக்கப்பாக்கிறது நல்லாயில்லே...''

'உண்மையில் ராஜீவ் கொலையை காட்டி விஷயத்தை விபரீதமாக மாத்தப்பாக்கிறவங்களுக்கு ராஜீவ் மீதுள்ள அக்கறையை விடவும் இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரக்கூடாது என்ற வயிற்றெரிச்சல் தான் அதிகமாக இருக்கு, பழைய புண்ணை நோண்டி நோண்டி ரணமாக்கி ரசிக்கிறாங்களே அவர்களுக்கு ஒரு வக்கிரம் இருக்கு...'

''மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட காரணமாக இருந்த இயக்கங்களைக் கூட மக்கள் மன்னிச்சுட்டாங்களே ! பிரபாகரனோட சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டை பார்த்த சில வடஇந்தியர்களுக்கு ஒரு தமிழனுக்கு இப்படியொரு முக்கியத்துவமா என்று தோன்றியிருக்கலாம்? ஆனால் இங்கிருப்பவர்களுக்குமா ...?'' இப்போதைய பிரச்சினை பிரபாகரன் குற்றவாளியா இல்லையா என்பதல்ல... சிதைந்து கிடக்கும் இலங்கைத் தமிழர் குடும்பங்களை இனியாவது ஒன்றுசேர விடணுமா இல்லையா என்பதுதான். என்று கூறியுள்ளார்.

உண்மையில் மண்வாசனைக் கலைஞனின் மனிதநேயம் கொண்ட இந்தக் கருத்துகள் இயல்பான உள்ளத்திலிருந்து எழுந்தவை என்பதில் சந்தேகமேயில்லை.



அக்கரையிலிருந்து அக்கறையுடன் ஒலிக்கும் இந்தக் குரல்கள் ஜெயலலிதா போன்றோரின் சுயநலப் பிதற்றல்களை புறந்தள்ளி, நம்பிக்கையூட்டி நிற்கின்றன.

பாரதிராஜாவுக்குள் இருக்கும் 'சிறுமைகண்டு பொங்கும்' பாரதியின் உணர்வு கொண்டகலைஞனுக்கு எமது நன்றி.

# பிறமுக அறிமுகம்

தனது அரசியல் எதிரிகளை சாடுவதில் சமர்த்தரான இந்தத் தாடிக்கார முன்னாள் புரட்சிவாதி இப்போது தன்னை ஒரு ஜனநாயகப் புரட்சிவாதியாகக் காட்டிக் கொள்வதில் தீவிரமாக அக்கறை காட்டி வரும் நபராவார்.

அனல் பறக்கப் பேசுவதில் சூரரான இவர் ஜே. வி. பியின் இன்றைய பிரதான இயக்க சக்திகள் சிலருள் முக்கியமானவர் உடைந்து சிதைந்து போய் எதிர்காலம் கேள்விக் குறியாக இருந்த ஜே வி. பியை 1990 களின் பிற்பகுதியில் மீண்டும் நிமிர வைத்ததில் இவரது உழைப்பும் பங்களிப்பும் மிக மிக முக்கியமானதாகும்.

1976 இல் ஜே வி. பியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட இவர் 1978இல் கட்சியின்முழுநேர உறுப்பினரானார். 1987 இல் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட இவர் பின் 1994 இல் விடுதலை செய்யப்பட்டார்- 1995இல்கட்சியின் பொதுச்செயலாளரானார்; இன்றுவரை அந்தப் பொறுப்பை இறுக்கமாகப் பற்றிக் கொண்டவராக உள்ளார்.

முன்னர் முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் குரல் கொடுப்பதில் தீவிரமாக இருந்த இவர் இப்போது சிறிலங்காவின் நவ ஏகாதிபத்திய- முதலாளித்துவக் கட்சிக்கு முண்டு கொடுத்து பாதுகாக்கும் நபராக இருப்பது ஆச்சரியமே...

தம்மைப் பெரும் சமதர்மவாதியாக பொதுவுடமைச் சிந்தனைவாதியாக இனம் காட்டிய இவர் இப்போது பேரினவாதிகளின் ஊதுகுழலாக மாறியிருப்பது இவரையும் அரசியல் கோமாளிகளின் வரிசையில் வைத்து கணிப்பிட வேண்டியவராக மாற்றி விட்டது.

அந்நிய சக்திகளின்- நாடுகளின் அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கும் உள்ளானமக்கள் தான் சுயநிர்ணய உரிமைகோர உரித்துடையவர்கள் என. சுயநிர்ணய உரிமைக்கு புதிய சித்தாந்த வரைவிலக்கணம் வழங்கும் இவர் சிறிலங்காவில் நடப்பது இனக்குழுக்களின் மோதல்தான், இங்கு சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார்

ஜே, வி. பியினரை தனது கணவரைக் கொன்ற கொலையாளிகள் என நேருக்கு நேர் விரல் சுட்டிக் காட்டி குற்றம் சாட்டிய சந்திரிகாவை பாதுகாக்க இவர் காட்டிய ஆர்வம் ஜே வி பி யின் சமகால புரட்சிகர சிந்தனையின் கேலிக்குரிய வெளிப்பாடு என்றே கூற வேண்டும்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் ஒடுக்கப்பட வேண்டும் என்று இப்போது தேசமெங்கும் ஒப்பாரி வைத்து புலம்பிவரும்டில்வின் சில்வாவின்தற்போதைய கோபமெல்லாம் நோர்வே அரசின் மீதானதே ஆகும்.

நோர்வேயை அமெரிக்காவினதும், புலிகளினதும் முகவர்கள் என்று பகிரங்கமாகவே திட்டிவரும் டில்வின் சில்வாவின் தற்போதைய ஒவ்வாமைக்குரிய சொல் புரிந்துணர்வு ஒப்பந்தமேயாகும்.

சந்திரிகாவுடன் கூட்டணி அமைத்து சாதுரியமாக செயல்ப்பட்டதுடன் கடந்த தேர்தல் அரசியல் ரீதியாக ஜே வி பி. க்கு அநுகூலங்களை பெற்றுக் கொடுத்த பெருமை இவருக்குரியதாகும். இதனால் பெரும் வீழ்ச்சியை சந்தித்தது சந்திரிகாவே

பொ, ஐ முன்னணி குறித்த இவரது கருத்து சந்தர்ப்பவாதக் கூட்டணி என்பதேயாகும், சந்திரிகாவை பொறுப்பற்று பேசும் அக்கட்சியின் தலைவி என்றே இவர் வர்ணிக்கிறார். ஆனாலும்அவர்களுடன் ஏன் கூட்டுச் சேர்ந்தீர்கள் எனக் கேட்டால் அது ஓர் அவசியமான அரசியல் நடவடிக்கை என விளக்கம் அளிக்கிறார்.

நாட்டின் ஆட்சியாளரை நிர்ணயிக்கும் சக்தி ஜே வி பி தான் என சுய விளம்பரம் செய்யும் இவருக்கு தற்போதைய எரிச்சல் தரும் விடயம் சமாதான முயற்சிகள் முனைப்பாக இருப்பதேயாகும்.

இப்போதைய அவரின அரசியல் கருப்பொருள் புலிகள், புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதானப் பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம் ஆகியன வற்றுக் எதிரான விடயங்களேயாகும்.

மறந்து போயுள்ள விடயங்கள் - சோஷலிசம், மார்க்ஸீயம்

அச்சம் தரும் விடயம் -விமல்வீரவன்சவின்வளர்ச்சி



டில்வின் சில்வா

## அரசியல் கண்ணோட்டம்



# முரண்பாடுகளின் மூட்டை சந்திரிகா தன்னை 'தோலுரித்துக் காட்டுகிறார்

— சசிகரன் —

ஸ்ரீறிலங்காவின் அரசியல் ஒரு விசித்திரமானது. இங்குதான் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தனித் தனித் துருவங்களாக இருந்து கொண்டு சமகாலத்தில் ஆட்சி நடத்துகின்றன.

எதிர்க்கட்சித்தலைவி சர்வ அதிகாரம் பொருந்திய சனாதிபதியாக இருப்பதால் அவர் தன் விருப்பப்படி ஆட்சியை நடத்த முற்படுகின்றார். இதேவேளை தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய ஐ.தே. மு. தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்து நாட்டைவழி நடத்த முனைகின்றார். இது நாட்டுக்கு ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்பது வெளிப்படை.

நீதியான ஒரு நாட்டின் தலைவியாக இருந்தால் அவர் நாட்டின் நலன் கருதியும், மக்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டும் நடந்து கொள்வது தான் நீதியானதும் மனிதாபிமானதுமாகும். ஆனால் சிறிலங்காவின் சனாதிபதியாக விளங்குபவரோ இவற்றுக்கு எல்லாம் அப்பாற்பட்டதுடன் ஒரு விசித்திரமான ஆட்சியாளராகவும் இருந்துவருகின்றார். இவர் பண்டாரநாயக்க குடும்பத்தில் பிறந்தவர். சிறிலங்கா சுதந்திரம் அடைந்தது முதல் சுமார் இருபத்தைந்து வருடகாலம் இந்த பண்டார நாயக்க குடும்பமே நாட்டை ஆண்டு வந்துள்ளது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் தமிழருக்கு எதிராக பல்வேறு அடக்கு முறைகளும் அமுல் படுத்தப்பட்டமை தெரிந்ததே.

அப்படிப்பட்ட ஒருபரம்பரையில் இருந்து அரசியலுக்குவந்தவர் தான் சந்திரிகா விஜய குமாரணதுங்க. நடிகரான இவரது கணவரது கொலையைத்தொடர்ந்து அவர் ஆரம்பித்த சிறிலங்கா மக்கள்கட்சியை தலைமையேற்று நடத்தினார். பின் 1993 காலப்பகுதியில் ஐ. தே க விற்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், நம்பிக்கையீனங்களைத்தமக்கு சாதகமாக்கி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் புகுந்து கொண்ட இவர் சில உதிரிக்கட்சிகளை இணைத்துக்கொண்டு பொது சன ஐககிய முன்னணிஎன்றபெயரில் தேர்தலில்குதித்தார். இவரது பிரவேசம் இவரின் சகோதரரானஅநுராவின் வெளியேற்றத்துக்கு காரணமாகவும் அமைந்தது.

சந்திரிகா தமது பரம்பரைக்கேயுரித்தான பேரினவாதப்போக்கை மூடிமறைத்து தன்னை ஓர் சமாதானத் தேவதையாகக் காட்டிக் கொண்டு தேர்தல்க் களத்தில் குதித்தார். இவரது போலி அரசியல்பேச்சுக்களில் மயங்கிய தமிழ்' சிங்கள மக்கள் தமது வாக்குகளை வாரி வழங்கி இவரை ஆட்சியில் அமர வைத்தனர்.

இவர் இந்த நாட்டில் தமிழருக்கு பிரச்சினைகள இருக்கின்றன. அதனை ''யுத்தம் இல்லாத சமாதானம்'' மூலம் தீர்த்துவைத்து நாட்டில்அமைதியை ஏற்படுத்துவேன் என முழக்கமிட்டு ஆட்சிப்பீடம் ஏறினார்.

அதுவரை காலமும்அப்படிஎந்தக் கட்சித்தலைவரும் பகிரங்கமாகஇவ்வாறு ஒப்புக்கொண்டதில்லை. இந்த வகையில் இவர் விசுவாசமானவர்என மக்கள் நம்பினர். இந்த நம்பிக்கை ஒரு சில மாதங்கள் வரைதான் நீடித்தது.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க சனாதிபதி ஆட்சிமுறைதடையாக இருப்பதாக குறறம் சாட்டிகாலத்தை இழுத்தடித்து வந்த இவர் சனாதிபதிபதவியை ஏற்றதும் தன் சுயரூபத்தைவெளிப்படுத்தத்தொடங்கினார். இதன் விளைவு நாட்டில் என்றும் இல்லாத யுத்தம் மூண்டது சமாதானத்தேவதை கொலை வெறி பிடித்த யுத்ததேவதையாக மாறினார். இவரது யுத்தம் இல்லாத சமாதானம் ''சமாதானத்திற்கான யுத்த'' மாக மாறியது.

நாடு அழிவை நோக்கி வேகமாகச்சென்று கொண்டிருந்தபோதும் அதனை மூடிமறைத்துதவறானபுள்ளி விபரங்களை மக்களுக்கு வெளியிட்டதுடன், சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைக்கக்கி இரண்டாவது தடவையாகவும் சனாதிபதியானார்.

இதனை அடுத்து அரசாங்கம்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐ.தே.க. பாராளுமன்றத்தில் முன்னறிவித்தல் கொடுத்தது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமக்கு சாதகமாக அமையாது என்பதை தெளிவாகப்புரிந்து கொண்ட இவர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்து மிகவும் கீழ்த்தரமான அரசியலை நடாத்த முயன்றார். இதற்கு பல்வேறு மட்டங்களிலும் எதிர்ப்புக் கிளம்பவேபாராளுமன்றத்தைக்கலைத்து புதிய தேர்தலைச் சந்திக்கத்தயாரானார். இவரது அரசியல் செயற்பாட்டில் அதிருப்தியடைந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், எஸ்.பி திசாநாயக்க ஆகியோர் கட்சியிலிருந்து வெளியேறி ஐ.தே க வுடன்இணைந்து கொண்டனர். இது இவரது கட்சியின் வீழ்ச்சிக்கும், ஐ. தே. க. வின் வெற்றிக்கும் முக்கிய காரணமாகியது. அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஒரு தீர்வுத்திட்டம் தயாரித்துள்ளதாக இவர் நாடகமாடி உலகை ஏமாற்றினார். இதுவும் இவரது கட்சியின் தோல்விக்கு காரணமாகியது.

இத் தேர்தலில் வெற்றி பெற ஆட்சி அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யவும் இவர் தயங்கவில்லை. கட்சியில் முக்கிய அங்கம் வகித்து, நம்பிக்கைக்குரியவர்களாக இருந்த பீரிஸ், எஸ்.பி, திசாநாயக்க ஆகியோர் கட்சி மாறியமையால் நிலை குலைந்த இவர் சமுர்த்தி அமைச்சராக இருந்த எஸ். பி. திசாநாயக்க மீது பெரும் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியதுடன் அவரை கைது செய்யவும் முற்பட்டார்.

ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இவரது கட்சியில் சமுர்த்தி அமைச்சராக இருந்தவர் மீது அவர் வெளியேறிய பின் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியமை கேலிக்குரிய விடயமாகியதுடன் மக்கள் மத்தியில் எடுபடாமல் போய் விட்டது.

கள்ள வாக்குகளைப் போடுவித்தும், வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டும், வாக்குப் பெட்டிகளை கடத்தியும் இவரால் வெற்றி பெற முடியாது போய்விட்டது. புலிகளை முற்றாக ஒழித்த பின்பே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என பேரினவாதக் கூச்சல் இட்டும் அது எடுபடவில்லை. சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றில் மிகக் கூடுதலான தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றது இவரது காலத்தில், தான் என்ற பெருமையும் இவருக்கே கிடைத்தது. வன்முறைகளில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டு, படுகாயப்படுத்தப்பட்டதுடன் சொத்துக்களும் பெருமளவில் அழிக்கப்பட்டன.

ஆரம்பத்தில்பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் ஜே. வி பி. யினரை நேரடியாகச் சுட்டிக் காட்டித் தன் கணவரைக் கொன்ற கொலைகாரர்கள். நீங்கள் பேசுவதற்கு அருகதையற்றவர்கள் என பகிரங்கமாகச் சுட்டிக் காட்டிய சந்திரிகா பின் தேர்தலில் ஐ தே. க. வை எதிர்க்க அதே ஜே. வி. பி. யுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் தன் கணவருக்கே துரோகம் இழைத்தார்.

அதுமட்டுமல்ல சமூக விரோதக் கும்பல்களையும், பாதாள உலகக் கோஷ்டியினரையும் கூட்டுச்சேர்த்துச் செயற்பட்டார். பாதாள உலகத்தவர்களையும், தனது பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களையும் பயன்படுத்தியே இவர் வன்முறைகளையும், படுகொலைகளையும் புரிந்தார். பத்திரிகையாளர்கள், குமார் பொன்னம்பலம் போன்றோரின் படுகொலைகளுடன் இக் கும்பல்களுக்கு தொடர்பு இருப்பதாக முதலில் குற்றம் சாட்டப்பட்டது. இது தற்போது வெளிச்சத்திற்கு வரத்தொடங்கியுள்ளது.

சனாதிபதி தென்னாபிரிக்கா சென்றிருந்த வேளை அங்கு உரையாற்றுகையில், ''இலங்கையில் தமிழர்கள் வந்தேறு குடிகள்'' எனதெரிவித்தார். இதனால் ஆத்திரமுற்ற குமார் பொன்னம்பலம் பண்டாரநாயக்க பரம்பரை இந்நாட்டில்வந்தேறு குடி என்பதைஆதாரங்களுடன் வெளியிட்டதுடன் நிலாபெருமாள் என்பவரின் வழிவந்தவர்களே சந்திரிகா பரம்பரை எனவும் நிரூபித்திருந்தார்.

இதுவே இவர் படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்தது. இக்கொலையில் ரத்வத்தையின் மகன் மகோன் ரத்வத்தை சம்பந்தப்பட்டிருப்பதுடன் குமாரின் மனைவிக்கு சந்திரிகா அனுப்பிவைத்த அனுதாபக்கடிதத்தில் இறப்பதற்கு முன்னதாக திகதியிடப்பட்டிருந்தமை மூலம் குமார் கொலை தொடர்பாக இவர் மீதான சந்தேகமும் வலுப்பெற ஆரம்பித்தது.

இதேபோல் கட்சியிலிருந்து விலகிய எஸ்.பி.திசாநாயக்காவை சந்திக்கச்சென்ற பாதாள உலகத்தைச்சேர்ந்த பத்தேகம சஞ்சீவ அவருடன் கூடச்சென்றவராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

முஸ்லிம்கள் படுகொலையுடன் தொடர்பு பட்டதாக இவரது நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் பாத்திரமான ரத்வத்தை குடும்பம் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளதுடன் சனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் இயக்குநர் உட்பட பலரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

இவர்கள் கைது செய்யப்பட்டபோது இவர்களை விடுவிக்க சந்திரிகா பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டதுடன் ரணிலின் உதவியையும் நாடினார். சனாதிபதி நாட்டின் நீதிக்கு தலைவணங்குவதற்கு பதிலாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி இவர்களை (தனி நபர்களை) பாதுகாக்க முயன்றதுமட்டுமல்லாது ஐ. தே. முன்னணியினர் வேண்டுமென்றே இத்தகைய குற்றச்சாட்டுக்களை தமது கட்சியினர் மற்றும்ஆதரவாளர்கள் மீது சுமத்திவருவதாகவும் குற்றம் சாட்டினார்.

சனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு இயக்குநரும், அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும் நெருங்கிய நண்பருமான நிகால் கருணாரட்ண நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கையில் சனாதிபதியின் பணிப்பிற்கு அமையவே இவற்றைத் தாம் செய்ததாக தெரிவித்துள்ளார். இது ஒன்றே இவரது உண்மை முகத்தை உலகிற்கு தோலுரித்துக்காட்டப்போதுமானது.

இதேவேளை இவரது உண்மை முகத்தை வெளிக்காட்ட இரு சம்பவங்களை இங்கு சுட்டிக் காட்டலாம்.

தேர்தல் காலத்தில் நடந்த வன்முறைகளின் போது தமது கட்சியினர் மற்றும் ஆதரவாளர்கள் மீது ஐ. தே. கவினர் தாக்குதல் நடத்துவதாகவும், படுகொலை புரிவதாகவும் குற்றம் சாட்டிய இவர் ஒரு கட்டத்தில் தான் சனாதிபதி என்பதையும் மறந்து தமது கட்சியினர் மீது யாராவது தாக்கினால் அவர்கள் மீது திருப்பித்தாக்கி அவர்களைக் கொல்லுங்கள் என உத்தரவிட்டார்.

இது போலவே கடந்த மேதினம் அன்று அப்புத்தளையில் இவர் உரையாற்றும் போது மோசமாக நடந்து கொள்ளும் ஐ. தே. மு. ஆட்சியாளருடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டும் எனக்கூறுவோரின் தோலை உரிக்க வேண்டும் என முழக்கமிட்டார்.

இவை சமாதானத்தேவதையின் உண்மை முகத்தை உலகிற்கு நன்றாகவே தோலுரித்துக் காட்டப்போதுமானவை, மொத்தத்தில் இவர் ஆட்சிப்பீடம் ஏறியது முதல் இன்றுவரை பேசியவை, நடந்து கொண்டவை அனைத்துமே ஒன்றுக்கொன்று முரணானவையாகவே இருந்து வந்துள்ளன.

காலத்துக்குக்காலம் இவர் தன் உண்மை முகத்தை தெரிந்தோ, தெரியாமலோ வெளிப்படுத்தியே வந்துள்ளார். இருந்தபோதிலும் காலப் போக்கில் தன் மீதும் நேரடியாக பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படலாம் என்ற அச்சம் இவருக்கு எழுந்துள்ளதாகவே எண்ண முடிகிறது.

பாதுகாப்புபிரிவு இயக்குநரின் சாட்சியம் மற்றும் ரத்வத்தைகுடும்

(15 ஆம் பக்கம் பார்க்க)




# உலக அமைதிக்கு அறிவியல் வழிசமைக்குமா?

கி. ஓவியநாதன்

புவி ஓட்டின் மேற்பரப்பை அச்சுறுத்தி வரும் காரணியான இன்றைய அறிவியலை மண்டை ஓட்டின் உட்பரப்பின் சிறிய பகுதிக்குள் இருந்து வெளிவரும் பூகம்பமாகவே இன்றைய உலக நிலவரங்கள் கருத வைக்கிறது. மனிதன், தான் வாழ்வதற்காக தொடங்கிய அறிவியல் நாளை, மனிதனை வாழவைக்குமா என்பதே கேள்விக்குரியவிடயமாகும்.

பிரபஞ்சத்தின் துகள்களில் ஒன்றென ஒப்பிடக் கூடிய பூமியில் அறிவியல் அரும்பாத காலத்தில் மனிதனும் இவ்வாழ் உயிரினங்களில் ஒன்றாகவே காணப்பட்டான். மனிதனின் சிறப்பியல்பின், இயற்கையின் தூண்டுதலால் மனிதனின் அறிவியல் ஆரம்பமானது. தன்னையும் தனது உணவையும் வேறு பிராணிகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக, தடியை எடுத்து போராடியதில் இருந்து ஆரம்பமான மனிதனின் அறிவியல்-இன்று பூமியில் ஒரு தடி கூட மிச்சமில்லாது அழிந்து விடக் கூடிய அளவிற்கு வளர்ந்துள்ளது.

உணவு, உடை, வதிவிடம், கல்வி, மருத்துவம் இவையே மனித வாழ்க்கைக்கு பிரதான தேவையான போதும், இன்று எத்தனையோ பல பிரதான தேவைகள் திணிக்கப்பட்டிருக்கின்றன. இதுமனித வாழ்க்கையின் ஒவ்வொரு பிரதான தேவைகளுக்காகவும் போரிட வேண்டிய தேவையை தோற்றியுள்ளது.

இன்றைய நவீன உணவுப் பழக்கத்தை எடுத்துக் கொண்டால் போசாக்கிற்காகவும் சுகாதாரத்திற்காகவும் போரிட வேண்டி உள்ளது. இன்றைய நவ நாகரீக உடைகளை எடுத்துக்கொண்டால் உடல் ஆரோக்கியத்திற்காகவும் பண்பாட்டிற்காகவும் சிரமப்பட வேண்டியுளளது. வதிவிட வசதியை எடுத்துக் கொண்டால் பாதுகாப்புடைய சுற்றாடலை தெரிவு செய்ய வேண்டிய தேவையும் நவீன கல்வியை கற்பதற்கான வசதிக்காக சிரமப்பட வேண்டிய தேவையும் மருத்துவத்தை நோக்கில் நவீன கைத்தொழில் போக்குவரத்து இரசாயனத் தாக்கங்களால் உருவாக்கப்படுகின்ற புதிய நோய்களை கண்டறிவதிலும், குணப்படுத்துவதற்கும் சிரமப்பட வேண்டியுள்ளது.

அறிவியலின் சாதாரண வளர்ச்சியானது எமது பிரதான தேவைகள் ஒவ்வொன்றிற்கும் அச்சுறுத்தலாக அமைகின்ற போதும், இன்றைய உலகின் அறிவியல் ஆய்வுகளின் அடி முடி தேடும் படலத்தால் எத்தனை ஆபத்துகள் என்பது சாதாரண சிந்தனையில் தெளிவாகின்றது. அறிவியலின் இன்றைய வளர்ச்சியாகவே ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை சமப்படுத்த வேண்டியதும் அதன் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டியதுமான எத்தனையோ தேவைகள் இருக்கும் போது அதனை பேச்சளவில் மட்டும் வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் யுத்த கலாச்சாரத்தில் உச்சம் தேடும் ஆபத்தான போட்டியில் முனைப்பாகவுள்ளது.

நவீன போக்குவரத்துதொலைத்தொடர்பு போன்றவற்றின் இன்றைய வளர்ச்சியில், உலகம் ஆறுகி ஒரு சிறியவட்டத்துக்குள் இருப்பதைப் போன்ற பிரமிப்போடு பார்க்கும் நாம், அதன் பேராபத்து நிறைந்த வளர்ச்சியால் உலகின் ஆயுட்காலம் குறைந்து போகின்ற ஆபத்தையும் உணர முடிகின்றது. யுத்தம் இன்றைய உலகின் கலாச்சாரம் போன்று மாறிவருவது மட்டும்அல்லாமல் அத்தியாவசிய தேவையாகவும் மாறிவருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உட்பட எத்தனையோ நாடுகள் யுத்தத்தின் மூலம் அரசியல் நடத்திவருவதும் நாட்டின் பெரும்பாலான மக்கள், பட்டினிச்சாவிற்கும் சிறிதளவேனும் மருத்துவ வசதி இன்றி இறந்து கொண்டு இருக்கின்ற போதும் பலமடங்கான தொகையை இராணுவ நவீன ஆயுத செலவினங்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. மக்களையும் சொத்துக்களையும் சின்னாபின்னமாக்கிவரும் அநாகரீகமான இந்தச் செயல்களுக்கு ஆயுதங்கள் வழங்கி ஊக்குவிக்கின்ற பல தொழில் நுட்ப நாடுகளும் யுத்த விரும்பிகளே.

வல்லரசுகள் எனப்பட்டம் பொறித்து வளர்ச்சிகண்ட நாடுகள் தங்கள் வித்துவ மேலாதிக்கத்தைக் காட்ட, மனித வலுவை இவ்வாறு ஒழிக்கும் நோக்குடன், அதனால் மனிதனுக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களை உணராது கணணி உலகத்தை கட்டி எழுப்பி மனித வலு உலகிற்குத் தேவையில்லை என்ற சங்கடமான நிலையை தோற்றுவிக்க முனைகிறது.

அதிகரித்து வரும் மனித பெருக்கமும் அற்றுப் போகும் வேலை வாய்ப்பும் மேலும் உச்ச சங்கடமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆழ்கடல் தொடக்கம் அண்டவெளிவரைக்கும் பரந்துவிட்ட இன்றைய அறிவியல்- எத்தனையோ பல அரிய சாதனைகளைப் புரிந்தும் பல அரிய தகவல்களைக் கண்டறிந்தும் பெருமிதம் கொள்ளும் போது, இவ் அறிவியல் வாத நாடுகளின் போட்டி பொறாமை, பேராசை போன்ற காரணத்தினால் உலக ஆபத்துக்களை கருத்தில் எடுக்காமை முக்கிய விடையமாகும்.

உலகப் பற்றை இன்று உலுக்கி வரும் விடயம் அணுவாயுதமாகும். இந்த கொடிய விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் யார் கூடிய புள்ளியில் நிற்கிறார்களோ அவர்களே உலகின் பலமானவர்கள் என்ற நிலை வந்தபோது இன்று கணிசமான நாடுகளில் அணு விஞ்ஞான வளர்ச்சியை இரகசியமான முறையில் அதிகரித்து வருவதும்பரீட்சித்தும்வருவதுமுக்கிய விடையமாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது முதலாம் தர வல்லரசு ஒன்றினால் ஹிரோசிமா, நாகசாகியில் கற்றுக் கொண்டதன் பாடமாக இன்று இரண்டாம் தர வல்லரசுகள் வரை இவ் அணு விஞ்ஞான ஆர்வத்திலும் வளர்ச்சியிலும் மேலோங்கிக் கொள்வதை காணலாம்.

மனித குலத்தின் ஆபத்து நிறைந்த இவ் அறிவியல் விருத்தியால் மனித வாழ்விடம் மட்டுமல்ல, சூரிய குலமே அழித்தொழிக்கப்படும் ஆபத்துக்கள் நிறையவே காணப்படுகின்றன. அண்ட வெளியில் சந்திரன் செவ்வாய் வரை சென்று விட்ட விஞ்ஞான மனிதன், அங்கயும் மனித ஊடுருவலையும் அணு ஆய்வுகள், அணுதேக்கங்கள் என பல வழிகளில சிந்திப்பதை நோக்கும் போது மனிதனுடைய இவ் ஆபத்தான அறிவியல முயற்சி பிரபஞ்சத்தையே இவ்வாறு ஒழித்து விடும் என்பதே உண்மையாகும். இவ் உண்மையைப் புரிந்த அனைத்துலக அணுவாயுத தடை ஒப்பந்தத்தை வலியுறுத்துகின்ற அணுவாயுத நாடுகளோ தாங்களாய் முந்தி ஒழிக்கத்தவறின் அழிவைத்தடுக்க முடியாது என்பதையும் புரியாமல் இல்லை.

இது போன்ற பல அறிவியல் விபத்துகள் பற்றிய ஆய்வாளர்களின் கூற்றுக்கள் இன்று நிகர்சனமாவதை எமது சமூக வாழ்க்கை ஓட்டத்தோடு ஒப்பு நோக்கும் போது, நாம் அவதானிக்கலாம். இன்றைய எமது வாழ்க்கை முறை கணிசமான உடற்பயிற்சியும் கணிசமான உடல் உழைப்பும் இன்றி முழுக்க முழுக்க இயந்திர சாதனங்களையே ஆதாரமாகக் கொண்ட வாழ்க்கையாகும். இன்று நாம் காண்கின்ற வளர்ச்சியானது எமது சிறு பராயத்தில் இருந்ததை விட படிப்படியாக வளர்ந்ததே ஆகும்.

நாம் வாழ்ந்த கால இடைவெளியை நோக்கினோம்: ஆனால் அறிவியல்மேதை "ஆதர்சிகிளார்க்" கூறிய கூற்று ஒன்று சரியாகப்புலப்படுவதை உணரமுடியும். அதாவது "இன்னும் பல ஆயிரம் வருடங்களுக்குப்பின் தோன்றும் மனிதனுடைய தோற்றம் ஒரு தீக்குச்சியைப்போன்று பெரிய தலையும் சிறிய மெல்லிய உடல் அமைப்பும் கொண்ட மனித உருவமே தோன்றலாம்" என்ற கூற்றை நாம் அவதானிக்கும் போது சமகாலத்தில் எமது சமூகத்தில் சாதாரண பரீட்சை எழுதும் ஒரு

> "இன்னும் பல ஆயிரம் வருடங்களுக்குப் பின் தோன்றும் மனிதனுடைய தோற்றம் ஒரு தீக்குச்சியைப் போன்று பெரியதலையும் சிறிய மெல்லியஉடல் அமைப்பும் கொண்ட மனித உருவமே தோன்றலாம்."

மாணவனையும் எமது காலப்பகுதியிலோ அல்லது எமக்குத் தெரிந்த பல வருடங்களுக்கு முற்பட்டசாதாரணதரப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த ஒரு மாணவனையும் மனக் கண்ணாலே நோககினோமானால் இருவருக்கும் இடைப்பட்ட பெரிய தோற்ற வித்தியாசத்தை எம்மால் உணரக்கூடியதாக உள்ளது.

இன்று சாதாரணதரப்பரீட்சை எழுதுகின்ற மாணவனைப்பார்க்கின்ற போது எம்மாலேயே நம்ப முடியாத சிறியவனானதோற்றத்தை உணர முடிகின்றது. இதுவே இக்கூற்றுக்களை நியாயப்படுத்தப் போதுமான உதாரணங்களாகும். இதே போன்றுமனிதனுடையஇறப்பு வயது வீதமும் குறைந்துகொண்டுபோவதை நாம் அவதானிக்கலாம். குறிப்பாக எமது சுற்றாடலில் பேரன், பூட்டன் கொப்பாட்டன் ஆகிய தலைமுறையினரின் காலத்தில் 75 தொடக்கம் 95 வயதுக்கு இடைப்பட்டதேஇறப்பு வயதெல்லையாக இருந்தது. சிறுவயதிலும் நடுத்தர வயதிலும் நோய் காரணமாகவோவிபத்துக்கள்காரணமாகவோ இறந்தவர்களதுவீதம்அரிதாகவே காணபபட்டது. இன்று எமது சுற்றாடலிலே இறப்பு வயதெல்லை 60 தொடக்கம் 70 வரை குறைந்து காணப்படுவதோடு சிறுவயதினரும் நடுத்தர வயதினரும் இறக்கின்ற வீதம் பல மடங்காக அதிகரித்துக்காணப்படுவதை அவதானிக்கலாம்.

இதற்கு தற்போதைய தொழில் நுட்ப வளர்ச்சியே மூல காரணமாகும்: அதாவது மின்சார விபத்து, தீ விபத்து, நச்சு வாயு விபத்து, கடல், தரை, வான் போக்குவரத்து தொழில்நுட்ப விபத்துக்கள் போன்றன காரணங்களாக அமைகின்றன. இதனை விட இயற்கை மரணங்களின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதற்கு இன்றைய பயிர்ச்செய்கை முறையில் செயற்கைப்பசளைகள் கிருமி நாசினிகள் போன்ற இரசாயனஊட்டங்களால் மண்ணும் வளிமண்டலமும் மாசுபடுத்தப்பட்டு மனிதனின் ஆயுட் காலத்தை குறைத்துக் கொண்டமையும் இறப்பு வீதத்தை அதிகரித்துக் கொண்டமையும் மனிதனே தேடிக்கொண்ட விதை எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

இதில் குறிப்பிடக்கூடிய முக்கிய விடயம் வானொலி, தொலைக்காட்சி பத்திரிகைபோன்ற ஊடகவியல் சாதனங்களூடாக விளம்பரம், அறிமுகம் என்பவற்றின் ஊடாக மனிதனை இரசாயன நாகரிகமாகும்ஆர்வத்தை தூண்டும்தூண்டுகோலாக நின்று செயற்படும் தன்பங்கையும் வெளிக்காட்டி மனிதனை மட்டந்தட்டிக்கொண்டதையும் குறிப்பிடலாம். இவ் ஊடகவியல் சாதனங்களின் ஊடுருவல் இன்று அரசியல் இராணுவ புலனாய்வு கட்டமைப்புகளுககுள் நுழைந்து வெற்றிக் கொடி நாட்டி அழிவுக்கான தன்பங்கையும் காட்ட முனைவது ஒன்றும் புதியது அல்ல.

இதனைவிட இன்று மண்ணை ஆக்கிரமித்துக்கொண்டுள்ள ஒரு கொடிய பொருளாக அச்சுறுத்தி வருவது பிளாஸ்திக் எனப்படும் செயற்கை ஊடகமாகும். இது இன்று எவ்வளவு அதிகமாகப்பயன்படுத்தப்படுகிறதோ அதே அளவு அதிக தாக்கத்தைபூமியின் மேற்பரப்பில் இருந்து காலப் போக்கில் அவதானிககலாம். பாவனைக்கு இலகுவானதும் பார்வைக்கு கவர்ச்சியானதுமான இப்பிளாஸ்திக் பாவனைப் பொருடகள் எத்தனை ஆண்டுகளானாலும் அழியாது மணணை சிறைப்பிடிக்கும் தன்மை கொண்டது. இபபாவனைப் பொருட்களின் கழிவுகளை எரிதது அழிப்பதன் மூலம் வளிமண்டலத்தில நச்சுப்பொருடகள் கலப்பதோடு ஓசோன்படலத்தையும் பாதிககும் ஆபத்தைக் கொண்டுள்ளமையால் இப்பாவனைப்பொருட்கள் உற்பத்தி செய்வதும் பயன் படுத்துவதும் உலகை அச்சுறுத்தும் நடவடிக்கையாகும்.

தற்போது இதனைப் பயன்படுத்தாத மனிதர்களோ இது சம்பந்தப்படாத பொருட்களோ இல்லை என்ற அளவிற்கு இதன் பாவனை அதிகரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இதன் பாவனை இன்னும்சில ஆயிரம் வருடங்கள் இதே வேகத்தில் பயன்படுத்தப்படுமானால் இதன் ஆதிக்கத்தில் இருந்து மண்ணைமீட்க முடியாது. மண்ணின் தொழிற்பாடுகள் அனைத்தும் இழந்து, உயிரினங்கள் அற்ற வெறும் பிளாஸ்திக் பந்தைப் போன்று அண்டவெளியில் சுற்றும் நிலைக்கு தள்ளப்படலாம்.

இப்படி ஒவ்வொரு வளர்ச்சியும் பூமியை அழித்தொழிக்கக்கூடியவாறு வியூகம் எடுத்திருப்பதை உணர முடிகின்றமை இதிலிருந்து உலகையும் உயிரினங்களையும் பாதுகாக்கும் பொறுப்பும் அறிவியலிலே தங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்னொரு போர்முகம்



தூயவன்

முன்னிருக்கும் முட்கம்பி வேலியோடு 25 மீற்றருக்கு ஒருமுறை ஒரு மின்குமிழ் ஒளிர்ந்தவண்ணம் இருக்கின்றது. இப்போது காப்பு ஏற்பாடுகளை ஒரு ஈ. காக்கை ஊடுருவினால் கூட கண்டுபிடிக்கப்பட்டுவிடும். இவ்வளவையும் கடந்து காவலிலிருக்கும் வீரர்கள் கண்களில்மண்ணைத்தூவிச் செல்வது என்பது திறந்திருக்கும் முதலையின் வாயினுள் தலையை விடுவதற்குச் சமனாகும். ஆனால் இதைச் செய்தே தீரவேண்டும் என்ன வழிமுறையைக் கையாளலாம். எனப்பலவாறு எண்ணிக் கொண்டிருக்கும்போது இவர்களின் வேவுப்பயிற்சி (விசேட) நிறைவின் போது அண்ணா சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. ''எந்தவொரு பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கும். அதனைக் கண்டுபிடியுங்கள்'' என்பதே அது.

என்ன பலவீனம்... என்ன பலவீனம்... இவன் உள்ளம் கேட்டபடியே இருக்க கண்கள் சூழலை கவனிக்க, காது உள்வாங்கும் ஒவ்வொரு சிறு அசைவிலும் ஓசைக்கும் மூளை காரணங்களை கிரகித்து ஆறுதல் படுத்திக் கொண்டிருக்கிறது. இவனுக்கு இடப்பக்கமிருக்கும் மின்குமிழொன்று திடீரென ஒளியிழக்கின்றது. இது அவன் கவனத்தை ஈர்க்கின்றது அதனையே தொடர்ந்து அவதானிக்கின்றான். அது மீண்டும் ஒளிரத்தொடங்கியது. ''சே. நல்ல சந்தர்ப்பம் தவறிவிட்டது'' என எண்ணியவன் அதனைத் தொடர்ந்து அவதானிக்கின்றான்.

அது மட்டும் மென்பச்சை நிறமாக இருப்பதை அவதானிக்கின்றான். ஏன் இப்படி? என யோசிக்கையில்மீண்டும் அது அணைகின்றது. இவனுக்கு பளீர் என மூளையில் பொறி தட்டுகின்றது.. ''பவர்கட்... பவர்...கட் இந்த பல்ப் பவர் கட்டா குது- இதுதான் இவர்களின்ர வீக் பொயின்ற்... என்ரவிஸ்பொயின்ற்'' இதைவிட்டா வேறு நல்லவழிகிடைக்காது. எண்ணியவன் தொடர்ந்தும் அவதானிக்கின்றான். ஆம் அவ் மின்குமிழ் ஐந்து நிமிடம் உயிர்வாழ்ந்தாலொவ்வொரு நிமிடமளவு மூர்ச்சலகிப் போகின்றது. இதைப் பயன் படுத்தினால் சரி... இனியென்ன செய்யவேண்டும்? வலப்பக்கம் திரும்பிப்பார்க்கின்றான்.

அந்த மூவரும் நிற்கின்றனர், இனியொன்றும் செய்ய இயலாது. இடதுபக்கமாக ஒவ்வொரு அடியாக சருகுச்சத்தம்கூட கேட்காமல் நகர்கின்றான். அம்மின்குமிழிற்கு நேர் வந்தவனுக்கு ஒரு யோசனை பிடிக்கின்றது. இந்த வேலியிலையும் கரண்ட் பாய்ந்தால் என்னசெய்யிறது? மெல்ல ஒரு நீளமான கொடியொன்றை அறுத்தெடுத்தவன் அதன் இருமுனைகளும் இரு கம்பிகளில் தொடும் வண்ணம் தூக்கிப்போடுகிறான்: மின்சாரம் பாய்வதற்குரிய அறிகுறிகள் ஏதுமில்லை இனி உள்ளே செல்ல வேண்டும், என்ன செய்யலாம்? நிலத்தோடு நிலமாக ஊர்ந்தவண்ணம் முட்கம்பிக்கு அருகில் வருகின்றான்.

மின்குமிழ் அணைந்தவுடன் நாய் விராண்டுவதுபோல் மண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக விறாண்டுகின்றான். மின்குமிழ் எரியும்போது அசையாமல் அப்படியே படுத்து விடுகின்றான். பக்கமாகத் திரும்பி காவலரணுக்கு வெளியே நிற்பவர்களைப் பார்க்கின்றான். அவர்கள் தங்களினுள் ஏதோ சுவாரஸ்யமாக கதைத்துக்கொண்டிருக்கிறார்கள்: ஒரு ஆள் புகுந்து செல்லக் கூடியவாறு நிலத்தைத் தோண்டிவிட்டான். சற்றுப் பின் வாங்கி பற்றைக்குள் பதுங்கி ஓய்வெடுத்து தன்னை நிதானப்படுத்திக் கொள்கின்றான்.

சரி இனி பவர்கட் ஆகேக்க வேலி புகுந்து பண்டிற்கு மற்றப்பக்கம் போகவேணும் என எண்ணியவன் இன்னுமொருசாதகமான விடயத்தைக் கவனிக்கின்றான். இவ் மின்கம்பத்திற்கு நேரேயுள்ள காவலரணில் ஆள்நடமாட்டம் இல்லை. இதனை கவனித்தால் அவனுக்கேற்பட்ட அதீத நம்பிக்கையின் விளைவு...

விரைவாகத் தன்னை தயார் படுத்துகின்றான். ''ஜீன்ஸ்'' பொக்கற்றினுள் இருந்த இரண்டு கறுப்பு காலுறைகளையும் எடுத்து அணிகின்றான். சாக்குத்தொப்பியை மீண்டும் சரிபார்க்கின்றான் பாட்டா இரண்டையும் கையினுள் கோர்த்து முழங்கை வரையும் இழுத்துவிடுகின்றான். கைக்குண்டொன்றை இடுப்புப்பட்டியிலிருந்து உருவியெடுத்து அதன் பாதுகாப்பு வளையத்தினை ஒருமுறை பார்க்கின்றான். நிலத்தில் படுத்து அங்குலம் அங்குலமாக முழங்கையினதும் கால் பெருவிரலினதும், உதவியால் மெல்ல மெல்ல எவ்வித சத்தமும் கேட்காமல் ஊர்ந்து செல்கின்றான். தான் வழி ஏற்படுத்தி வைத்திருந்த இடத்துக்குக் கிட்ட வந்து கிடக்கின்றான்.

பண்டில் நிற்கும் வீரர்களினதும், மற்றும் காவலரண்களில் நிற்பவர்களினதும் தெளிவான பார்வை பலத்தினுள்ளும் கொலைவலையத்தினுள்ளும்இலகுவாக,ஆனால், மிகவும் பெறுமதியான இலக்காய் இவன் கிடக்கின்றான். மின்குமிழ்களை நிறுத்தியவுடன் சற்று வேகமாகவே நகர்கின்றான். மீண்டும் அது உயிர் பெறுமுன்னர் பண்ட் தாண்டிவிடவேணும் எனும் அவசரம் உந்தித் தள்ள முட்கம்பி புகுந்தவன் சரசரவென சாரையாக ஊர்கையில் சனியன் பிடித்த மின்குமிழ் மீண்டும் ஒளிரத்தொடங்கிவிட்டது:

இவனது சப்த நாடிகள் அனைத்தும் ஒடுங்கிவிட்டது. நேர்மேலே பாய்ச்சப்படும் மின் ஒளி மழையில் நனைந்தவண்ணம் தன் சிறு அசைவும் அவர்கள் பார்வையை கவர்ந்துவிடலாம் எனும் அழுத்தம் நிறைந்த நிலையில் எதிரியின் கைக்கெட்டிய தூரத்தில் இவன் கிடக்கின்றான். கைக்குண்டின் பாதுகாப்பு வளையத்தினுள் விரலைவிட்டு இறுகப்பற்றியவண்ணம் தலையை பக்க நிலத்தோடு சாய்த்தவண்ணம் வலப்புறம் நிற்கும் எதிரி வீரர்களைப் பார்த்தவண்ணம் படுத்திருக்கின்றான். தன்மூச்சையே கட்டுப்படுத்தி மென்மையாகவே வெளிவிடுகின்றான்.


படக் படக் என்னும் இதய ஓசையே இவன் செவிப்பறையை உடைத்துவிடுவதுபோல் பலமாகக் கேட்கின்றது. இவனின் அவதானமின்மையோ எதிரியின் அவதானமோ இரண்டுமே இவனுக்கு ஆபத்தானது. அப்படி அவன் கண்டிட்டால் என்ன செய்வது கைக்குண்டை வீசிவிட்டு திட்டமிட்டபடி அப்பக்கம் ஓட வேண்டியதுதான். அவ்வாறு நடந்தால் அவ்வளவுடன் இத்திட்டத்தை தூசிபிடிக்க விடவேண்டியதுதான். பலவாறு ஓட வெளிக்கிட்ட எண்ணங்களைஒருமுகப்படுத்த முற்பட்டதாலோ அதிகமன அழுத்தத்திற்குட்பட்டிருந்ததாலோ என்னவோ அப்படியேநித்திரையாகிவிடுகின்றான்

அவனது நல்லகாலம் சில நிமிடங்களில் சுயநினைவிற்கு வந்துவிடுகின்றான். சற்றுமுன் நடந்ததை உணர்ந்தவன் தனக்குள் தான் முன்னர் நம்பமறுத்ததை தவறென உணர்கின்றான். லெப் கேணல் பிறேம் நாத் அண்ணா சொன்னது ஞாபகத்திற்கு வருகின்றது இவர்கள் பலாலியில் சென்றிக்கு நிக்கேக்க றெக்கிக்கு வந்த ஆமிக்காரன் ஒருவன் தங்கட ''பொயின்றுக்கு'' முன நித்திரையாகிப்போனானாம். அடுத்தநாள் ''கிளியருக்கு'' சென்ற எங்கட ஆக்கள் சத்தம் போடத்தான் எழும்பியவனாம். இவர்கள் பிறகு சுட்டவையாம். இதனை,தான் முன்னர் நம்பாததையும் இப்பொழுது. தானே அந்நிலையில் இருப்பதையும் கண்கூடாகக்காண்கின்றான்:

மீண்டும் பவர்கட் வந்தவுடன் சற்று வேகமாக நகர்ந்து பண்டைக் கடக்கின்றான். மறுபக்கம் சென்றவன் அங்கு ஒரு உடைக்கப்பட்ட கட்டிடம் ஒன்று அரைகுறையாக இருப்பதைக் காண்கின்றான். அதன் மூலையின் இருளொன்றோடு சங்கமித்துக்கொள்கின்றான். அங்கிருந்த வண்ணம் முன்னால் இருந்த வீதியை அவதானிக்கின்றான்: அக்காட்சி உண்மையில் பயத்தை ஏற்படுத்துகின்றது: ஒருவன் ''அல்சேசன்'' நாயொன்றை கையில் பிடித்தவண்ணம் வருகின்றான்: அதன் வெளித்தெரியும் வேட்டைப் பற்களும் அதனிடையே வெளித்தொங்கும் நீளமான நாக்கிலிருந்து வடியும் நீர்த்துளிகளிலும் மின்னொளி பட்டுத் தெறிக்க அவை வைரம்போல் இடையிடையே ஒளிர்கின்றன. ''இது என்னை மோப்பம் பிடித்தால்... அப்படியொன்றும் நடக்காது தன்னைத் தானே தேற்றிக்கொள்கின்றான். நாயுடன் வந்தவன் இவனைக்கடந்து ஒவ்வொரு காவலரணாய்ச் சென்று சென்றி செக் பண்ணுகின்றான்.

(தொடரும்)

---




# கல்வியின் பெயரால் வன்முறை

○ பிரபஞ்சன்

ஒன்பதாம் வகுப்புச் சிறுவன் தேர்வில் கொப்பி அடித்தானாம். ஆசிரியர் பிடித்து விட்டார். அன்று மாலை ஒருமரத்தில் அவன் தூக்குப் போட்டுச் செத்திருப்பதை ஆசிரியர்களும் மாணவர்களும் பார்த்திருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் தினசரியில் வந்த செய்தி இது. சந்தடியின்றி ஒரு மனித உயிர் போய் விட்டது!

என்ன வயதிருக்கும், அந்தக் குழந்தைக்கு? பதினாலு? அந்தப் பிள்ளையைப்பெற்றவர்கள் என்னமாய்த் துடித்திருப்பார்கள்? தூக்குப் போட்டுச் செத்துப் போகும் அளவுக்கு என்னென்ன உணர்வுகள் அவனுக்குள் கொந்தளித்திருக்கும்? சாகும் முன் என்ன நினைத்திருப்பான் அந்தக் குழந்தை? யாரையெல்லாம் நினைத்திருப்பான்? தங்கையை, அக்காவை, தம்பியை, அண்ணனை, அப்பாவை, அம்மாவை...?

வாசித்து மறக்கும் செய்திகளோடு, இதையும் சேர்த்துக் கொள்ள முடியுமா? மனித உயிர் அவ்வளவு அற்பமாகவா போய்விட்டது; அந்தச்சிறுவன் சுயக்கொலை செய்து கொள்ள உந்தித் தள்ளிய காரணிகள் எவை? அவனொடும் இந்த வாதை முடிந்துவிடப் போகிறதா? அல்லது தொடரும் எனில், அதைப்பற்றி சமூகம் சிந்திக்க வேண்டாமா?

ஒரு வகுப்பில் குறைவான புள்ளி வாங்கினால் சக மாணவர்கள் முன் தன் கவுரவம் பாதிக்கப்படும்; குடியே முழுகிப் போனது போல பெற்றோர்கள் கண்டிப்பார்கள். தண்டனையும் தருவார்கள் என்றெல்லாம் நினைத்து அஞ்சித்தானே அந்தக் குழந்தை தன்னையே தண்டித்துக் கொண்டது? ஒரு குழந்தையின் மனதில் இந்தவகையான அச்சத்தை உருவாக்கி வைத்திருப்பது கல்வி நிறுவனங்களின் தகுதிக்குச் சரியானதா? பரீட்சையில் வாங்கும் மதிப்பெண்தான் மாணவனின் அறிவுக்குச் சான்று என்னும் அறியாமைக் கருத்தை அந்தக் குழந்தையின் மனசுக்குள் புகுத்திய ஆசிரியர்கள் செய்கை எந்தவகையில் நியாயம்.

ஒரு குழந்தை சரியாகப் படிக்கவில்லை என்றால் அது தங்களின் தவறு என்பதை ஆசிரியர்கள எப்போது உணரப் போகிறார்கள்? குறைந்த மதிப்பெண் பெற்று வந்த குழந்தையின் அச்சத்தைப் போக்கி, கிடக்கிறது விடு, அடுத்த பரீட்சையில் நீ தான் நூற்றுக்கு நூறு என்று சொல்லத்தெரியவில்லை என்றால் அவர்கள் என்ன பெற்றோர்கள்? இன்று பெற்றோர் என்கிற அதிகாரத்தைப் பிரயோகித்து குழந்தைகளை முதல் வரிசைக்குத் துரத்தும் பெற்றோர்கள் தங்கள் காலத்தில் முதல் மாணவர்களாக இருந்தார்களா என்ன? இந்தப் பெற்றோர்கள் பிழைத்துக் கொள்ள ஒரு 'பீடுங்கி' உத்தியோகத்திற்கும் சம்பளத்திற்கும் உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கையில், அந்தக்குழந்தைக்கு மட்டும் அது கிடைக்காதா?

ஜன சமூகம் முதல் வரிசை மாணவர்களால் ஆனதா என்ன? தங்கள் குழந்தை என்பதாலேயே படிப்பைச் சாட்டாய் வைத்து கருணை அற்றவன் முறையை குழந்தைகள் மேல் பெற்றோர்கள் செலுத்துவது குற்றம் அல்லவா? ஆம் குற்றம்தான் அதுசொந்தக் குழந்தைகளேயானாலும். ஏனெனில், குழந்தைகள் மனித உயிர்கள்.

குழந்தைகள் பற்றிக்கவலைப்பட்ட பாரதி. காலையில் படிப்பை வைத்தார். பின்பு கனிவு கொடுக்கும் நல்லபாட்டிசைத்தார்மாலை முழுக்கவிளையாட்டு என்பது அவர் விதி. வீட்டுப்பாடம் கொடுத்து, குழந்தைகளின்அருமையான மாலைகளைச்சிறைபிடிப்பது, ஆசிரியர்கள்செய்கிற மனித உரிமை மீறல் அல்லாமல் வேறு என்ன? எட்டு மணிநேரம் பள்ளிகளில் கிழிக்காத எந்தப்படிப்பை, மாலைநேரத்தில் கிழிக்கும் குழந்தைகள் என்று எதிர்பார்க்கிறார்கள்?

பள்ளிக்கூடங்கள், குழந்தைகளுக்கு அனுசரணையாக இருந்து, அவர்களின் அறிவை, மனதை, ஆத்மாவைப் போஷிக்கும் இடமே தவிர தண்டனைக்கூடம் அல்ல. மிக அதிக புள்ளிகள்எடுத்து, மாவட்டத்திலேயே முதலாவதாக வருகின்ற மாணவர்களை உருவாக்கும் பள்ளி என்ற பெயரை எடுக்க குறைந்த புள்ளிகள் எடுக்கும் மாணவர்களை, தேர்வு பெறாமல்தடுப்பதும் அரசு இறுதித் தேர்வுக்கு அனுப்பாமல்தடுப்பதுமான போக்குகள் பல பாடசாலைகளில் இன்றும் நிகழ்கின்றன.

மனித வாழ்க்கையின் ஒரு வருஷ காலத்தைக்கேவலம், புள்ளியின்அடிப் படையில்தேங்கவைப்பது, மாபெரும் மனித விரோதச் செயல் என்பதை சாராயக்கடையைப்போலவும் இன்ன பிறவியாபாரக்கடைகள் போலவும்பள்ளிக்கூடங்களை நடத்தும் வியாபாரிகள், வியாபாரக் கொள்ளையர்கள் உணர வேண்டும்.

நேருவும் படேலும் இருந்த சபையில் 1948 ஆம் ஆண்டு வினோபாபாவே, ''யூனியன்ஜாக் கொடியை இறக்கி சுதந்திரக்கொடியை ஏற்றிய நீங்கள், வெள்ளைக்காரர்கள் திணித்த கல்வித்திட்டத்தை எப்போது தான் மாற்றப்போகிறீர்கள்?'' என்றார்: இன்னும் புள்ளியை வைத்து மாணவனின் ''மதிப்பை'' எடை போடுவது அவலம் என்பதை எப்போது உணரப்போகிறார்கள் பள்ளிக்கூட அதிகார வர்க்கத்தார்? ஒருமனிதனை, அவனது ''வங்கி மீதியை'' வைத்து எடை போடுவதற்கும் குழந்தைகளை மதிப்பெண்களைக் கொண்டு எடைபோடுவதற்கும் என்ன பெரிய வித்தியாசம்?

■ இதழியல்

# செய்திகளும், அவற்றின் வகைகளும்

■ வல்வை ந. அனந்தராஜ்

செய்தி என்பதற்கு குறித்த ஒரு வரைவிலக்கணம் கொடுப்பது இலகுவானது அல்ல. புதிய ஒரு சம்பவம் அல்லது வழமைக்கு மாறான ஒரு நிகழ்வுதான் செய்தியாகும்.

ஒரு சம்பவத்தை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கோ அல்லது ஆட்களுக்கோ பரப்புவதன் மூலம் அந்த விடயத்தை அறியச் செய்வது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைமுறையில் இருந்து வருகின்றது:

உ-ம்: 1. முரசுஅறைந்துசெய்தியைப் பரப்புதல்

2. காகங்கள் போன்றபறவைகள் கூட செய்திகளைப்பரப்புகின்றன.

3. உலகத் தோற்றத்தில் முதன் முதலில் செய்தியைப் பரப்பியவன் சாத்தான்;

''செய்தி'' (news)என்றஆங்கிலச் சொல் நான்கு திசைகளில் இருந்தும் வரும் தகவல்களைத்திரட்டித்தருவது என்ற பொருளைக் குறிக்கின்றது.

செய்தி என்ற தமிழ்ச்சொல்லை செய்தி என்று பிரித்தால் 'செய்' என்ற பகுதி 'செய்தது செய்வது' என்ற தொழிலைக் குறிக்கும்; அதனால் 'தி' என்ற விகுதி சேர்ந்து 'செய்தி' என்ற தொழிலாகு பெயராகின்றது எனக் கூறலாம். எனவே செய்ததோ, செய்கின்றதோ செய்வதோதான் செய்தியாகின்றது: எங்கு எதுநடந்தாலும் அது உடனே செய்தியாகக் கருதப்படுகின்றது. செய்யப்படாதது எதுவும் செய்தியாவதில்லை. புகழ்பெற்ற 'சேம்பர்ஸ் அகராதி' 'நியூஸ்' என்றஆங்கிலச் சொல்லுக்கு. 'புதிதாகக்கேட்கப்படுகின்ற ஒன்று. இப்பொழுதுதான் நடைபெற்ற ஏதாவது ஒன்றைப்பற்றிய முதல் தகவல்' என்று விளக்கம் தருகின்றது.

செய்தி பற்றிப் பலர் வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர்;

''பயிற்றப்பட்ட தொழிலாளர்களால் தொகுக்கப்பட்ட சம்பவங்களை அனுபவப்பட்ட ஒரு பத்திரிகை ஆசிரியரால் அனுமதிக்கப்பட்டு, மக்களுக்குப் பயன்படும் வகையில் தகவல்களாகக் கொடுப்பதே செய்தியாகும்'' என்று குறிப்பிட்டுள்ளனர். இதனைஇன்னொரு விதமாகக் குறிப்பிடுவதெனறால்,

''புதிய ஒன்றினை அல்லதுஅறிந்திராத ஒன்றினை அல்லதுஇருககின்ற ஒன்றினை அல்லது தெரியாத ஒன்றினை அறிய வைப்பது செய்தியாகும்.'' எனவே 'செய்தி' என்பதற்கு இது தான் என்று குறித்த ஒரு வரைவிலக்கணத்தைக்கொடுக்க முடியாது. ஆனால்,

- செய்தி என்பது புதியதகவல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்;
- வழக்கமான நிகழ்ச்சியில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும்.
- தற்காலத்தில் நடந்தவையாக இருத்தல் வேண்டும்.
- வாசகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்;
- ஒரு செய்தியானது மக்களைக்கவரும் வகையில் இருக்கவேண்டும்.

அந்த வகையில் சூழலில் நடைபெறும் அசாதாரண நிகழ்ச்சிகள் எதுவும் செய்தியாகலாம். இதனை ஒருஆங்கில இதழாசிரியர் வேடிக்கையாகப் பின்வருமாறு குறிப்பிடுவார்:

''நாய்மனிதனைக்கடித்தால் அது செய்தியல்ல. ஆனால் மனிதன் நாயைக் கடித்தால் அதுவே செய்தியாகும்''

> ''புதிய ஒன்றினை அல்லது அறிந்திராத ஒன்றினை அல்லது தெரியாத ஒன்றினை அறிய வைப்பது செய்தியாகும்.'' எனவே 'செய்தி' என்பதற்கு இது தான் என்று குறித்த ஒரு வரைவிலக்கணத்தைக் கொடுக்க முடியாது.

இச்சம்பவம் வழமைக்கு மாறான எல்லோரையும் கவரக்கூடிய ஒருநிகழ்ச்சி என்பதால் செய்தியாகின்றது;

வெளிநாட்டுவிளம்பர வல்லுனர் ஒருவர், செய்திபற்றிக் கருத்துத்தெரிவிக்கையில்;

''செய்தியின் முக்கியத்துவத்தை எவ்வாறு மதிப்பிட வேண்டுமென்றால் அதன் கால அவசரம் சரியான தகவலை அடிப்படையாகக் கொண்டுள்ள தன்மை உள்ளார்ந்த முக்கியத்துவம் உள்ள நிலை, மனிதர்கட்கு உற்சாகம் ஊட்டக்கூடிய தன்மை ஆகியவற்றை இணைத்தே மதிப்பிடவேண்டும்'' என்ற கருத்து ஒரு செய்தியைப்பற்றிய விளக்கத்தைக்கொடுக்கின்றது.

செய்திக்குத்தருகின்ற பல விளக்கங்களில் குறிப்பிடத்தக்கவற்றைப் பின்வருமாறு தொகுத்துக்கூறலாம்;

''எதையாவது வெளிக்காட்டுவது செய்தி.''

''நேற்று நீங்கள்இதனைத்தெரிந்திருக்கவில்லையோ அது இன்றைய செய்தியாகின்றது.''

''நடைமுறையில் இருந்து சாதாரணமானவற்றில் இருந்து மாறுபட்ட எதுவும் செய்தியாகும்.''

''சிலர் மூடி மறைக்கநினைப்பது செய்தியாகும்.''

ஒருசமுதாயத்தில்பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்ற அவர்களால் புரிந்து கொள்ளக்கூடியஎந்த ஒருநிகழ்ச்சியும், கருத்தும் எண்ணமும் செய்தியாகும்.''

''பெரும்பாலான மக்களின்ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஒரு செய்தித்தாள அச்சிடுவதும், வானொலி ஒலிபரப்பும் தொலைக்காட்சி, இணைய ஒளிபரப்புக்களும் செய்திகள் ஆகின்றன.''

''செய்தி என்பது செய்தித்தாள் உருவாக்குவது;''

''பெருந்தலைவர்கள் சொன்னவை செய்திகளாகும்:''

''நல்ல செய்திகள் செய்திகளாவதில்லை.''

''வாசகர்களுக்கு முக்கியமான, சுவையூட்டும் நடப்பு நிகழ்ச்சிகளின் உண்மைகளின்தொகுப்புக்களே செய்திகள்.''

''வாழ்க்கைக்கு சுவை தரும் எதுவும், அது வெளிப்படும் முறைகளில் செய்தியாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.''

''செய்திகள் என்பவை பால் உணர்வு, பணம், குற்றம் ஆகியவற்றோடு தொடர்புடையவை.''

''மிகப்பெரியபுகழ்பெற்றபெயர்கள் செய்திகளாகின்றன.''

இன்றைய செய்திகள் நாளைய வரலாறு.''

''மக்களைப்பற்றி, மக்களுக்காக மக்களால் எழுதப்படுபவை செய்திகள்.''

எனவே செய்தி பற்றிய எல்லா விளக்கத்தையும் இணைத்துத் தரும் முறையில் செய்தியினை,

''ஒரு கருத்து, நிகழ்ச்சி, சிக்கல் பற்றிய உண்மையான, சரியான நடுநிலையான குறிப்பு உண்மையானதாக, நிகழ்காலத்தோடு தொடர்புடையதாக, மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நடைமுறைக்கு மாறுபட்டதாக இருக்கும் சிலவற்றைப் பற்றிய விளக்கம்'' என்று ஆர். இராமச்சந்திரா ஐயர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்,

## எவை செய்திகளாகின்றன?

தொம்சன் நிறுவன ஆசிரியர் குழுவின் ஆய்வு நிலையம் செய்திகளாகக்கூடிய 20 வகைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளது, அவை எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடியவை;

1. புதுமையானது- எது புதுமையாக நடக்கின்றதோ அது செய்தி.
2. மனிதத் தாக்கம்- வாசகருக்குச் சுவையூட்டுவதும், அன்றாட வாழ்க்கையைப் பாதிப்பனவும்;
3. உள்ளூர் நடவடிக்கைகள்-தூரத்தைவிட உள்ளூர்ச் செய்திகளை அறிவதிலேயே ஆர்வம் கூட.
4. பணம்-பணம் நிதியுடன் தொடர்பானவை. உ-ம்: வரவு செலவுத் திட்டம்.
5. குற்றம்- குற்றங்களைப் பற்றிய செய்திகள், சூடான செய்திகளாகும்.
6. பால் தொடர்பானவை- ஆண், பெண் பால் உணர்வு தொடர்பான செய்திகள்.
7. மோதல்- மோதலையும், அறிவதில் ஆர்வம் கூட,
8. சமயம்- சமய நிறுவனங்கள் சார்ந்த செய்திகள்,
9. அழிவும், துயரமும்- துயரம் மற்றும் அழிவுச் செய்திகள் மக்களின் இதயத்தைத் தொடும்,
10. நகைச்சுவை- மக்களின் நகைச்சுவைக்குத் தீனியாகக் கூடியவை,
11. மனித ஆர்வங்கள்- மனிதர்களுடன் தொடர்புடைய இன்ப, துன்ப நிகழ்ச்சிகள்.
12. ஏழைகளைப் பற்றியவை- ஏழைகளின் வாழ்க்கையில் நடைபெறும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்.
13. மர்மம்-உடனடியாகத் தெரிய முடியாத மர்மமான செய்திகள்.
14. சுகநலம் - உடல் நலத்துடன் தொடர்பான மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் செய்திகள், உடல்நலக் குறிப்புகள்.
15. அறிவியல்- அறிவியல் விந்தைகளும், சாதனைகளும்;
16. பொழுதுபோக்குகள் - திரைப்படம், நாடகம் விளையாட்டுக்கள் போன்றவை பற்றிய செய்திகள்,
17. புகழ்பெற்ற மனிதர்கள்- சமுதாயம், சமயம், அரசியல், விளையாட்டு, திரைப்படம் போன்ற துறைளிகல் புகழ் பெற்றவர்களின் செய்திகள்.
18. காலநிலை- இயற்கைக் காலநிலை மாற்றங்கள பற்றியவை,
19. உணவு-உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு, விலை ஏற்றம், விலைக்குறைப்பு பற்றிய செய்திகள்,
20. சிறுபான்மையினர்- சிறுபான்மையினர் தொடர்பான செய்திகள் மற்றவர்கள் நடாத்தும் முறைகளு, சிக்கல்களும் செய்தி மதிப்பைப் பெறும்.

(தொடரும்)

# கண்ணி வெடிகள்

உலகிலேயே ஏராளமான கண்ணிவெடிகள் உள்ள நாடுகளுள் அங்கோலாவும் ஒன்று. ஆனால், அங்குள்ள கணணிவெடிகளை நீக்குபவர்கள புதிய ஒரு பிரச்சினையை எதிர்ப்படுகின்றனர்' அவர்களைத் தாக்குவதற்காகவே குறிவைக்கப்பட்ட விசேசித்த கண்ணிவெடிகளே அவை; லண்டனின் 'த சன்டே டைமஸ்' அறிக்கை செய்வதாவது; 'கண்ணிவெடிகளோடு இணைக்கப்பட்ட இரண்டு வகையான ஸ்விட்சுகளை கண்டுபிடித்துளளனர்,

அதில் ஒன்று, வெளிச்சம் பட்டவுடன் கண்ணிவெடியை வெடிக்கச் செய்கிறது; 12 மாதம் வரை தாக்குப்பிடிக்கும் பேட்டரிகள அவற்றிற்கு தேவையான சக்தியை அளிக்கின்றன; மற்றொன்றில் காந்த வளையம் ஒன்று உள்ளது. அது 20 மீட்டருக்கும் அதிக தொலைவிலுள்ள கண்ணிவெடி நீக்கும் கருவியை உணர்ந்தவுடனே வெடிக்கும்படி தயாரிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொன்னால் இது கண்ணிவெடிகளை நீக்குபவர்களுக்காகவே தயாரிக்கப்பட்ட ஒரு கண்ணிவெடி;

கண்ணிவெடிகளை நீக்கி பொதுமக்களுக்கு உதவ விரும்பும் வாலண்டியர்களைக் கொல்வதற்காகவே இவை விசேசமாக தயாரிக்கப்படுகின்றன என்று கண்ணிவெடிகள் தகவல் குழுவைச் சேர்ந்த டிம் கார்ஸ்டார்ஸ் கூறுகிறார். இப்போது அங்கோலாவில் கணணிவெடிகள் காரணமாக கை அல்லது காலை இழந்த 70,000 பேர் உள்ளனர்; இதுவே உலகிலேயே மிகவும் அதிகமாகும். இது போதாது என்பதைப்போல, ஒவ்வொரு மாதமும் டொக்டர்கள் சராசரியாக 35 பேருக்கு கையை அல்லது காலை நீக்குகிறார்கள். இதற்கிடையில். அங்கோலாவின் உள்நாட்டு போரில் சண்டையிடும் பிரிவினர்கள் தொடர்ந்து புதிய கண்ணிவெடிகளைப் புதைத்துக்கொண்டே இருக்கின்றனர்;

அவற்றிற்குப் பயந்த விவசாயிகள் தங்கள் நிலத்தை தரிசாக போட்டுவிடுவதால், மக்களுக்குத் தேவையான உணவு கிடைக்காமல் போகிறது; அதன் காரணமாக 'அங்கோலா நாட்டைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் பயங்கரமான ஊட்டச்சத்து குறைவு, வியாதி, மரணம் போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர் என ஐநா பொதுச் செயலர் கோஃபி அன்னான் எச்சரித்தார்;

■




# ராஜாமும், நிமலனும்; அவனும்..

ராஜாம் செத்துக் கிடந்தான.

உழத்தியிருக்கவேணும்; கால்கள் கிழிந்திருந்தன. ரத்தம் உறைந்த நெற்றிப் பொட்டில், மூளை தள்ளியிருந்தது. உலர்ந்த ரத்தத்தில் இலையான்கள் பூத்திருந்தன. எறிந்திருந்த கைகள் இரண்டிலும் மண் இருந்தது. உயிர் கழரும்போது ராஜாம் மண்ணை அள்ளியிருக்க வேணும்,

ராஜாமைக் கண்டதிலிருந்து அவன் நினைவுகளில் வலிபெருகத்தொடங்கியது. ராஜாமின் முகம் ஒரு குடையளவில் விரிந்து கண்களின் முன் நின்றது:

ராஜாமின் முகத்தை அவனால், நினைவுகளிருந்து கழற்றமுடியவில்லை:

■

அவன் வீட்டுக்குப் பக்கத்தில்தான ராஜாமின் வீடு. அவனின் வயதுதான் ராஜாமின் வயதும். அவன் ராஜாமோடு தான் பள்ளிக்கூடமும் போவான். ராஜாம் சின்ன சிவத்த சைக்கிள் வைத்திருந்தான்: ராஜாம் பள்ளிக்கூடம் போகும் போது வீட்டுக்கு வந்து அவனை சைக்கிளில் ஏற்றிச் செல்வான்,

ராஜாம் நல்லா சித்திரம் செய்வான். பூக்களையே அதிகம் வரைவான். வானம், நட்சத்திரங்கள், கடல் எல்லாவற்றிலும் வசிக்கின்ற கனவுகளை தூரிகைக்குள் கொண்டுவருவான்;

ராஜாம் இரவில் அவனோடுதான் வந்து படிப்பான். அவனோடு படுத்துவிட்டுத்தான் விடிய வீட்டுக்கு போவான்; அவனின் கையை தலைக்கு வைத்துக் கொண்டுதான் படுப்பான். சிலவேளைகளில் நித்திரை கொள்ளாது பிடிபட்டு உருளுவார்கள். பலப்பரீட்சையில் எவரும் வெல்லாது பூட்டுப் போட்டபடி கிடப்பார்கள். அவர்களைப்பார்க்க சாரைப்பாம்புகள் சோடியுடன் பிணைவது மாதிரி இருக்கும்,

■

அழுக்கேறிய முகங்களும், விசம தடவிய பற்களும் அவன் கண்களில் பாம்புகளாயின; அங்குமிங்கும் பார்த்தான்; நெடுக்குளம் றோட்டும் வவுனியா ரவுண றோட்டும் வெறிச்சோடிப் போயிருந்தன; பைக்குள் இருந்த சாரத்தை எடுத்து ராஜாமை மூடினான்.

சைக்கிள் ஒன்று பிறேக்கடித்து நின்றது. பீச்சியடித்தது அச்சம்; திரும்பிப் பார்த்தான்: நிமல் நின்று சிரித்தான். அவன் நிமலின் சைக்கிளில் மளமளவென்று ஏறினான்.

நிமலுக்கு ராஜாமை ஒரு போராளி என்று தெரியும். ஒரு நாள அவன் நிமலோடு கடையில் நின்றான். அப்போது ராஜாம் வந்தான். அவனுடன் கதைத்து விட்டுச் சென்றான். அவனுக்கும் ராஜாமுக்குமிடையில பெரிய நட்பிருந்ததை நிமல் அவதானித்திருக்க வேண்டும்.

ராஜாமை யார் என்று கேட்டான். ராஜாம் ஒரு போராளி என்று அவன் சொன்னான்.

ராஜாம் என்னமாதிரி அவனுடன் பழகினானோ அதேமாதிரித்தான் நிமலும் பழகினான்.

அவன், வவுனியாவுக்கு வந்த முதல்நாள், நிமலின் கடைக்கு முன்னால்தான். நின்றான். நிமலின் இளநீர் கடை அழகாய் இருந்தது; சாம்பிராணிப் புகையில் அமிழ்ந்து போன நிமல் அவனையே பார்த்தபடி இருந்தான்,

அவனுக்கு நாக்கில் ஈரம் செத்திருந்தது. சொண்டுகளில் நுரைகள் இருந்தன. சொண்டு பொருக்கடித்திருந்தது;

''அண்ணை இளநீர் குடியுங்க''

குரலில் பரிவு இருந்தது; அந்தக்குரல் சுப்பையாவின் குரல் மாதிரி இருந்தது. சுப்பையாவின் குரலில் ஒரு இதம்.

■

அவன் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு வந்தபோது சுப்பையாவும் இளநீரைத்தான் நீட்டினான்.

''எங்கட வீட்ல இடமிருக்கு, நீங்க ஒருடமும் போவேண்டாம்''

வீட்டுக்குக் கூட்டிக் கொண்டுபோய் சாப்பாடு கொடுத்தார்; பாய் கொடுத்தார், சைக்கிளை எந்த நேரமும் எங்கும் எடுத்துச் செல்ல சுப்பையா அனுமதி கொடுத்தார்'

■

''அண்ணை புதிசு போல; லொச்லை தங்னா காஸ் போறதெரியா. ஆமியளிட ஆய்க்கனை ரொம்ப- கடேல இடமிருக்கு, மாதம் நூறு தாங்க.''

நிமலிடம் இரக்கம் இருந்தது- அது அவனை வருடியது: நிமலின் கடையிலேயே அவன் தங்கினான்,

■


ஒரு நாள் இரவு மழை தூறிக்கொண்டிருந்தது: நல்ல குளிர்: தூவானம் கடைக்குள் விழுந்தபடி இருந்தது. அவனுக்கு நல்ல காய்ச்சல், தேகம் உதறிக்கொண்டிருந்தது; நிமல் அருகிலே வந்து அவனைத் தடவிக்கொண்டிருந்தான்;

தெருவால் இராணுவ வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன, வீடு குலுங்கி உடைவதாயிருந்தது.

அவன் அனுங்கிக் கொண்டிருந்தான். அனுக்கங்கள் சுவர்களில் மோதி உடைந்து கொண்டிருந்தன.

நிமல அந்த மழை, குளிர், இராணுவ அச்சங்கள் எல்லாவற்றையும் உடைத்துக்கொண்டு போனான்; வரும்போது குளோறக்குயினுடனும் பிறிமாக்குயினோடும் வந்தான்.

நிமலுக்கு உரோமங்கள் சிலிர்த்திருந்தன. உடல் விறைத்திருந்தது. கண்கள் சிவந்திருந்தன. நிமல் குளிசையை அவனின் வாய்க்குள் வைக்கும் போது நிமலின் கண்ணீர் அவனில் விழுந்து கொண்டிருந்தது.



■

அவனுக்கு கொழும்பு செல்வதற்கு அனுமதி வந்து விட்டது. அவனுக்கு நிமலை நினைக்க துக்கம் தொண்டைக்குள் வந்தது; நிமலுடன் பழகிய நாட்கள் ஒவ்வொன்றும் பூக்களிட்டுக் கொண்டிருந்தன. நிமலுடன் சிநேகமான பொழுதுகளில் வசீகரித்தவை அவனுள் ஏராளம்.

## பிரஞ்ஞன்

நிமல் படுத்திருந்தான்; கைகள் தலையில் இருந்தன. வாய் திறந்திருந்தது. குறட்டை சப்தத்தில சுவரால் இறங்கிய எலி ஒன்று கெடுதிப்பட்டது.

அவனுக்கு நித்திரை வரவில்லை. எழும்பினான்; சாரம் சிரைஞ்சு துடையில் வழிந்திருந்தது நிமலுக்கு; எழும்பும போது நிமலின் சாரத்தை சரி செய்து விட்டு எழும்பினான்.

அயன்பண்ணி மடித்து வைக்கப்பட்ட உடுப்புகளை எடுத்து, பாக்கில் வைத்தான்; நீலச்சேட் புதிதாயிருந்தது. அதை நிமலுக்குவைத்தான். தான் கட்டியிருந்த மணிக்கூட்டையும்கழற்றி சேட்டுக்கு மேல் வைத்தான்;

'காட்' ஒன்றை எடுத்தான்; வர்ணத்தில மிகவும் அழகான காட்: நடுவில் ஒரு இதயம்: அது சிவப்பாய் இருந்தது; அந்த இதயத்தில் இரு அம்புகள் தைத்தபடி இருந்தன.

அது''ஸ்நேகா'' அவனுக்குக்கொடுத்த காட். கொடுக்கும் போது தன்னுடைய ''இதயம்'' என்றுசொல்லிக்கொடுத்தாள்; அந்த காட்டை அவன் வன்னிக்கு வரும் போது மணலுக்கால் ஓடி வந்து கொடுத்தாள். அப்பவெய்யில் எரித்துக் கொண்டிருந்தது: இலைகள் கருகி உயிர்ப்பின்றி அழுதது: பூச்சிகள், புழுக்கள் எல்லாம் நிழலுக்காய் ஊர்வலமாகிய பொழுது அது.

அடுத்த கடிதத்தை எடுத்தான். அவன் அவளுக்குக் கொடுத்த கால்ச் சலங்கை, கைவளையல்கள், பூக்களிட்ட சட்டை எல்லாவற்றையும் செம்மணிப்புதை குழிகளில் தோண்டி எடுத்ததாக எழுதப்பட்டிருந்த கடிதம்;

கடிதத்தை பாக்கில் வைக்கும் போது விழி நறுக்கி ஊற்றியது அவனின் இதயத்தை.

நாளை ஏழுமணிக்கு பஸ்; பாயில் போய்ச்சரிந்தான;

விடிந்தது:

அவன் எழும்பி நேரத்தைப் பார்த்தான்; ஆறுமணி.

நிமல் பாயிலில்லை: அவன் நிமலின் பாயையும் சுற்றி மூலையில் வைத்தான்: கிணற்றடிக்குப்போய்குளித்து விட்டு வந்தான்

■ ——— ■

அடுத்த கடிதத்தை எடுத்தான். அவன் அவளுக்குக்கொடுத்த கால்ச் சலங்கை, கை வளையல்கள், பூக்க ளிட்டசட்டைஎல்லா வற்றையும் செம் மணிப்புதைகுழிகளில் தோண்டிஎடுத்ததாக எழுதப்பட்டிருந்த கடிதம்.

■ ——— ■

நிமல் இல்லை;

நிமலைத் தேடினான்: அவன் பல்துலக்கும் வேப்ப மரத்தடி, விபூதி பூசும் பிள்ளையார் கோயில், தண்ணிக்கானுடன் போகும் பற்றைக்காடு...

சைக்கிள் பூட்டியபடி நின்றது. நிமலின் இரண்டு செருப்புக்கள் வாசலில் இருந்தன. அவன் செருப்பில்லாது சுப்பையா மாதிரி திரியமாட்டான்;

நேரத்தைப் பார்த்தான்: ஆறம்பது. எழுமணிக்குப்பஸ்; பாக்கைத் தூக்கிக்கொண்டு நடந்தான்.

தூரத்தில் கொஞ்சச் சனங்கள் குவிந்து நின்றனர் காட்டு இறச்சிக்காரனைச் சுற்றி வன்னியில் சனங்கள் நிற்பதுமாதிரி. சிலர் நிலத்தில் காலூன்றி சைக்கிளில் நின்றனர். சிலர் அவசரவசரமாகப் போய்க் கொண்டிருந்தனர்;

அவன் கிட்டப்போனான்; பிணம் ஒன்று கிடந்தது. அது குப்புறக்கிடந்தது. பிணம் உழத்தியடித்திருக்க வேணும்; நிலம் விறாண்டுப்பட்டிருந்தது. தலையில் உலர்ந்த ரத்தத்தில் இலையான்கள் மொய்த்திருந்தன: கைகள் விரிக்கப்பட்டிருந்தன. உயிர் பிரிகையில் ராஜாமைப்போல பிணம் கைகளில் மண்ணை அள்ளிவைத்திருக்க வில்லை;

அவன் அப்போதுதான் பார்த்தான: அந்தச்சாரத்தை அது இரவு அவன்கொடுத்த சாரம். குளிரில் நிமல்நடுங்க அவன் நிமலுக்குக்கொடுத்த சாரம்.

அந்தப்பிணம் ''நிமல்'' என்றதும்எல்லாக்காற்றையும் உவிந்து, சுவாசப்பை திணறிப் பெருமுவதாயிருந்தது அவனுக்கு. வலிபெருகி கண்கள் ரத்தமாகியது: இமைகள் நறுக்கும் நீரில் அவனின் கண்கள் கரைந்து கொண்டிருந்தன; தோழிலிருந்த பாக்கை கழட்டினான்.

வாய் உருவி எறிந்த சொற்களில் தெருப்புழுதி தோய்ந்து போயிற்று, சிலந்தியின் வலைகளில் சிக்கிய பூச்சியின் கால்களாய் அந்தச்சொற்கள் இடறி, மரங்களில் மோதி அழிந்து போகிறது:

அவன் நிமலை நிமிர்த்தினான். முகத்தில் ரத்தமாய் காய்ந்திருந்த மண்ணை கைகளால் வழித்தான்.

நிமல் வெளித்தான்.

''உவன் ஆமிக்காரன்''


நிமலைப் பார்த்த ஒருவன் கத்திக்கொண்டு ஓடினான்: குரல்களில் விசிறியது பயம். எல்லோரும் குரல்களைப் பெருக்கினார்கள். எல்லாக் குரல்களிலும் காயங்கள் இருந்தன. பிணம் எல்லோரையும் நகங்களால் கீறியிருக்க வேணும்;

அவன் தனிச்சுப் போனான் பிணங்கள் பற்றிய பயம் அவனில் பெருத்துக்கொண்டு வந்தது;

பஸ் வந்தது;

மறித்துவிட்டு பாக்கைத்தூக்கினான்: ட்றைவர் அவனைப்பார்த்துச் சிரித்தான்; ட்றைவர்ராஜாமின் சிநேகிதன்;

■



## விரதம்

அம்மா, காலை
''வீடு மெழுகென்று சொன்னா''
கூட்டிப் பெருக்கி
சாணி பிசைந்து பிசைந்து
மெழுகுகிறேன்.

இன்று சித்திரைப்பறுவம்
அம்மா விரதம்.

என் பிஞ்சுக் கரம்
வலிக்க வலிக்க
பிறைபோல்
நிலம் வளித்து வளித்து
வீடு மெழுகுகிறேன்;

சுத்தமான வீட்டில்
மகாலட்சுமி குடியிருப்பாள்
என்று அம்மா சொல்லுவா
அம்மாவுக்கு இதை
ஆச்சி சொன்னதாம்;

மகாலட்சுமியை வரவேற்ற
வாசலிற் கோலமும்
போட விரும்பி
விரைவாய்
மெழுகுகிறேன் வீடு;

கோலம் போடும் மாவைப்
பிறவுயிர்கள் சாப்பிட்டால்
புண்ணியம் கிடைக்குமென்று
ரீச்சர் சொன்னவா;

தங்கவேல் ஐயாவின்
மாட்டடியில்
அள்ளி வந்த சாணம்
சற்றே காய்ந்திருந்ததால்,
தண்ணீர் விட்டுக்
கசக்கிக் கசக்கி
நிலத்தோடு
தேய்த்துத் தேய்த்து
மெழுகுகிறேன்.

''அந்தோ''

முருகன் படத்திற்கு
முன்னால்
என் கண்ணெதிரே
ஓர் வண்டு
நசிபட்டுக்கிடக்கிறது.

சிற்றறிவுள்ள சீவன்
சீவியத்திற்காய்
சாணிக்குள் புகுந்ததோ?

கோலம் போடும் நினைவில்
கொலைகாரி ஆனேனா?

இது மெய்தானோ?

என் பிஞ்சுக்கரம்
வலிக்குதென்று
சொன்னேனோ,
அதுவும் மெய்தானோ?

கோலம் போடும் மாவும்
விரதம் பிடிக்கும் அம்மா,
படைக்கும் உணவும் யாருக்கு?

ஞா. மணிமேகலை

---

0 கருணாகரன்

## நூல்நோக்கு

- நூல்-"தீ நிழல்கள் - மொழிபெயர்ப்பு சிறுகதைகள்
- ஆங்கிலம் வழி தமிழில் - சு.மகேந்திரன்
- வெளியீடு- புஸ்பா பிரசுரம்- பாப்பாமோட்டை, மாந்தை, மன்னார்

# உலகமெங்கும் எரியும் தீயின் தணியாத வெம்மைச் சுவடுகள்

'தீ நிழல்கள்' என ஏழு பிறமொழிச் சிறுகதைகளைக் கொண்ட தொகுதியொன்று வெளிவந்திருக்கிறது. இந்தக் கதைகளை சு.மகேந்திரன் (மயன் -2) மொழிபெயர்த்துத் தொகுத்திருக்கிறார். இக்கதைகள் முன்னர் வெளிச்சம் இதழ்களிலும் ஒரு கதை ஈழநாதம் பத்திரிகையிலும் பிரசுரமானவை.

பிறமொழிக்கதைகள் தமிழில் அறிமுகப்படுத்தப்படுவது இப்போது அதிகமாக இருந்தாலும் அவை தொகுப்புகளாக நூலாகுவது குறைவு. ஈழத்தில் பிறமொழிக்கதைகளின் தொகுதியொன்று வெளிவருவது நீண்டகாலத்துக்குப் பிறகு இதுவென்றே நம்புகிறேன். மொழிபெயர்ப்பில் கவிதைத் தொகுதிகள் வந்த அளவுக்கு கதைத்தொகுதிகள் வந்தது குறைவு. எனினும் தொடர்ச்சியாக வெவ்வேறு இதழ்களில் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. பலர் இந்த முயற்சிகளில் செயற்பட்டு வருகிறார்கள். ஆனால் அவை நூலாகுவதுதான் முன்பு குறிப்பிட்டுள்ளதைப் போல குறைவான நிலையில் தான் இருக்கிறது.

இப்பொழுது வன்னியிலிருந்து இந்தக் கதைத் தொகுப்பு வெளிவந்திருப்பது இந்த நிலையில் ஒரு மாற்றமாயமைகிறது. பிறமொழிப்படைப்புகளினூடாக தமிழ்ப் படைப்புச் சூழலையும் வாசகச்சூழலையும் ஒரு புதிய அனுபவ அறிதற் தளத்துக்கு அழைத்துச் செல்ல இத்தொகுப்பு உதவுகிறது. பொதுவாக மொழிபெயர்ப்புப்படைப்புகளுக்கு இப்படியான ஒரு பண்பு இருக்கிறது. அது இதற்கும் உண்டு. இதிலுள்ள ஏழுகதைகளும வெவ்வேறு நாடுகளில் வேறுவேறான காலப்பகுதியில் வெவ்வேறான அரசியற் சூழலில் வேறான வாழ்க்கை முறைகளினூடு எழுதப்பட்டவை. ஒவ்வொன்றின் அனுபவத்தளங்களும் வெளிப்பாட்டு அம்சங்களும் கூட வேறுபட்டவை. ஆனால் இக்கதைகள் அடிப்படையில் ஒரு ஒற்றுமையை, ஒன்றுபடுதலைக் கொண்டிருக்கின்றன.

இது இக்கதைகளைத் தேர்வுசெய்து, மொழிபெயர்த்த சு.மகேந்திரனின் கருத்துநிலை, ரசனை, சூழ்நிலையின் தேவை என்பவற்றின் காரணம் எனப்படுகிறது. இதனை ஓரளவுக்கு அவர் தனதுரையிலும் குறிப்பிடுகிறார். அத்துடன் கதைகள் எழுதப்பட்ட சூழ்நிலையும் ஒத்த தன்மைகளையுடையதே.

ஈழப்போராட்டச் சூழலின் தேவை இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகளை அதிகம் கோரிநிறகிறது. இதற்கு நல்லதொரு உதாரணமாக எண்பதுகளின் நடுப்பகுதியில் வெளிவந்த எம்.ஏ.நுஃமானின் 'பலஸ்தீனக் கவிதைகளைக்' குறிப்பிடலாம். நமது காலத்தின் தேவையை உணர்ந்து மகேந்திரனும் செயற்பட்டிருக்கிறார். முதலில் பரந்த வாசிப்புத்தளத்திலமைந்த பத்திரிகை, சஞ்சிகைக்கென கதைகளை மொழிபெயாத்தார். பின்பு அவற்றை இப்பொழுது நூலாக்கித் தருகிறார். இது இரண்டு வகைப்பட்ட செயற்பாடுகளின் விளைவு. வரவேற்கப்பட வேண்டியது. மகேந்திரன் மொழிபெயர்ப்புக் கதைகளுடன் கவிதைகளையும மொழிபெயர்த்து வருகிறார். கவிதைகளைமொழிபெயர்த்துப் பிரசுரிக்கும் போது மயன்-2 என்ற புனைபெயரைப் பயன்படுத்துகிறார். மகேந்திரன் மொழிபெயர்ப்புகளுடன் சுயபடைப்பாக்கத்திலும ஈடுபட்டுவருபவர்.

மகேந்திரனின் மொழிபெயர்ப்பு ஆர்வம் நவீனத் தமிழிலக்கியத்தில் முக்கிய அடையாளங்களில் ஒருவராக செயற்பட்ட க.நா.சு.வின் பாதிப்பால் ஏற்பட்டிருக்கிறது. க.நா.சுவும் இவரைப்போல சுயபடைப்பாக்கத்திலும் மொழி பெயர்ப்புகளிலும் ஈடுபட்டவர். க.நா.சு வின் தேர்வுகள் வேறுபட்டவை. பல நிலையப்பட்டவை. அவரது வேகம் அதிகமானது. மகேந்திரனின் தேர்வுகள் நம் சூழ்நிலையைச் சார்ந்தவை. ஒரு வகைப்பட்டவை. அத்துடன் க.நா.சுவின் மொழிபெயர்ப்பு முறைவேறு. மகேந்திரனின் முறைமை வேறு க.நா.சு கதைகளின் சாரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு சுயபடைப்புத்தன்மையுடன் மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார். மகேந்திரன் மூலத்தை அப்படியே மொழிபெயர்க்கும் தன்மையை பின்பற்றியிருக்கிறார். இது பிரம்மராஜனின் வழிமுறை எனக் கூறும் மகேந்திரன் லத்தீன் அமெரிக்கச் சிறுகதைகளை இதற்கு உதாரணம் காட்டுகிறார்.

இந்தத் தொகுப்பிலுள்ள ஏழுகதைகளும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என்ற மூன்று அமைவிடங்களிலிருந்து எழுந்தவை. இக்கதைகளில் இந்த அமைவிடங்களின் வாழ்புலத்தையும் பிரச்சினைகளையும் பண்பாட்டு அம்சங்களையும் மனித இயல்புகளையும் நிலக்காட்சிகள், பருவ நிலைகளையும் காண முடிகிறது. பிரான்ஸ், அயர்லாந்து, கொரியா, தென்னாபிரிக்கா, பலஸ்தீனம், சீனா, ஆகிய நாடுகளின் கதைகள் இவை. அத்துடன் இந்த நாடுகளில் நடந்த உள்நாட்டுப்போர், விடுதலைப் போராட்டங்களின் வெளிப்பாடுகளாக அமைந்த போர் அல்லது போராட்டப்படைப்புகளாக இவை இருக்கின்றன. காலமும் இடமும் சூழலும் பிரச்சினைகளும் வேறுபட்டாலும் கதைகளின் அனுபவமும் அவை கூறும் செய்தியும் எல்லாவற்றையும் கடந்து நமது வாழ்வுடன் சூழலுடன், பிரச்சினைகளுடன், காலத்துடன், அனுபவத்துடன் ஒன்றிணைகின்றன. மகேந்திரனின் தேர்வுகள் வெற்றிபெறுவது இதில் அதிகமாகிறது. இது சமகாலத்தில் அதிகளவு வாசக ஈர்ப்பையும் கவனத்தையும் இக்கதைகளின் பக்கம் ஏற்படுத்தியது. இதில் 'சினைப்பர்' என்ற கதை பெற்ற அறிமுகம் அதிகமானது. காரணம் அது நமது வாழ்வனுபவத்தின் உக்கிரத்துடன் பிணைந்து நிறபது.

இந்தக் கதைத்தொகுப்பு இன்னும் சில விடயங்களில் முக்கியமாகிறது. இது கடந்த நூற்றாண்டின் சிறந்த பிறமொழிகளின் படைப்பாளிகள் ஏழுபேரை அறிமுகபபடுத்துகிறது. அவர்கள் பற்றிய குறிபபுகளுடன் அவர்களுடைய கதைகளும் இந்த அறிமுகத்தை தமிழ்ப்பரப்புக்கு செய்கின்றனர் இந்தப்படைப்பாளிகள் ஏற்கனவே தமிழுக்கு நன்கு அறிமுகமாகியிருந்தாலும் இத்தொகுப்பு அவற்றை இன்னொரு கோணத்தில் காட்டுகின்றது. யங் இல் காங் (கொரியா) அன்றி மல்நக்ஸ் (பிரான்ஸ்) நடின் கொடிமர் (தென்னாபிரிக்கா) லியம் ஓ பிளாத்தி (அயர்லாந்து) எமிலி சோலா (பிரான்ஸ்) தௌபீக் பையாட் (பலஸ்தீனம்) வாங் சய் யென் (சீனா) ஆகிய இவர்களின் கதைகளே இத்தொகுப்பில் உண்டு.

கடந்த நூற்றாண்டுக்கு முதல் நூற்றாண்டின் கதை தொடக்கம போன நூற்றாண்டின் கதைகள்வரை இவற்றில் இடம் பெற்றிருக்கின்றன. கதைகளின் வளர்ச்சிப் போக்கு, பிரச்சினைகளின் தன்மைகள், எல்லைகள் எல்லாவற்றைக் கடந்தும் படைப்பும் படைப்பாளிகளும் கொளளும் ஒன்றிணைதல் எல்லாவற்றையும் கதைகள் காட்டுகின்றன. தமிழ் வாசகன் இவற்றை தெரிந்து கொள்ளவும் இவற்றினுள்ளோடும் சேதிகளைக் கண்டுகொள்ளவும் இவை உதவுகின்றன.

மனித விடுதலையே இவற்றின் சாரம். யுத்தத்தின் சேதிகளும் வாழ்க்கையின் கனவுகளும் மனித இன்னல்களின் எதிரொலிப்புகளும் நியாயமான விடுதலையையும் மனித மாண்பையுமே கோருகின்றன என்பதை இவை காட்டுகின்றன. இனம், மதம், மொழி, தேசம் கண்டம் என்ற எல்லாவரையறைகளையும் கடந்து உட்தொனியாய் பிரகடனப்படுத்தும் செய்தி இதுதான். இந்த வகையில் தீ நிழல்கள் ஈழத்துச் சூழலில் அல்லது தமிழ்ப்பரப்பில் ஒரு உண்மை வெளிப்பாட்டை காட்டி நிற்கிறது எனலாம்.

(15ம் பக்கம் பார்க்க)

# நவீன ஓவியத்தை ரசித்தல்...

நிலாந்தன்

> ''மரபின் பேராலோ அல்லது வழமைகளின் பேராலோ அல்லது எந்த ஒரு எதிர்பார்ப்பின் பேராலுமோ தனது கைகள் கட்டப்பட்டிராத ஒருவித பூரண சுதந்திர நிலையைத்தான் நவீன ஓவியன் கேட்கிறான். இத்தகைய ஒரு சுதந்திர நிலையைத்தான் அவன் ரசிகனிடமும் எதிர்பார்க்கிறான்''

எனது பிள்ளையார் ஓவியங்களைப் பற்றி வெள்ளிநாதத்தில் (26-04-2002) வந்த ஒரு கட்டுரை என்னை இக்குறிப்புக்களை எழுதத் தூண்டியது.

அக்கட்டுரையின் ஓரிடத்தில் இப்படி வருகிறது. ''எமது எதிர்பார்ப்புக்கள் இலவம்பஞ்சாகிப் போனாலும் தரமான படைப்புக்களைத் தரிசித்த மகிழ்ச்சி'' இந்த ஒரு வசனமே போதும் நவீன ஓவியத்தை ரசிப்பதில் எமக்குள்ள பிரச்சினைகளை விளங்கிக்கொள்ள.

''எதிர்பார்ப்புக்கள்'' இதுதான் பிரச்சினை. ஒரு நவீன ஓவியத்தை எதிர்பார்ப்புக்களோடு அணுகக் கூடாது. இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் முற்கற்பிதங்களோடு நவீன ஓவியத்தை அணுகக் கூடாது.

ஒரு குழந்தையை அணுகுவது போல, ஒரு பூவை அணுகுவதுபோல அதை முதல் ரசிக்கத் தொடங்க வேண்டும்.

நிச்சயமாக விளங்க முயற்சிக்கக் கூடாது.

ஒரு குழந்தையை ரசிக்கும்போது எதை விளங்கி ரசிக்கிறோம்?

ஒரு பூவை ரசிக்கும் போதுஎதை விளங்கி ரசிக்கிறோம்?

இங்கெல்லாம் விளக்கங்கள் எதுவுமின்றி ரசித்தலே முன்னுக்கு வருகிறது.

இதுதான் முக்கியம்.

முதலில் நவீன ஓவியத்தை ரசிக்க முயலவேண்டும். அது ''வடிவாக'' இருக்கிறதா இல்லையா என்பதே முக்கியம். வடிவாக இருந்தால் ரசிப்புதானாய்வரும். ரசிக்கத்தொடங்க அது தன்னைத்தானே திறக்கும். ரசிப்பவரின் கொள்ளளவைப் பொறுத்து அதுவும் தன்னைத் திறந்துகொண்டே போகும்.

பதிலாக, விளங்க முற்பட்டாலோ அது தன்னைத்தானே மூடிக் கொண்டு விடும்.

இங்கு ''விளங்குதல்'' என்பது நாம் முன்கண்ட முற்கற்பிதங்களின் பாற்பட்டது. ஏதாவது எதிர்பார்ப்போடு ஒரு நவீன ஓவியத்தை நெருங்கிச் செல்லும் எவரும் தமது எதிர்பார்ப்புக்களை அதன் மீது ஏற்ற முயல்வார்கள். இதுமுடிவில் அந்த ஓவியத்தை ரசிக்க முடியாதபடி மூடிவிடுகிறது.

மாறாக, எதிர்பார்ப்புக்கள் எதுவுமின்றி முற்கற்பிதங்கள் எதுவுமின்றி திறந்த மனத்துடன் அதை அணுக வேண்டும். அதாவது ரசிக்கவேண்டும்.

திறந்த மனம் அல்லது முற்கற்பிதங்கள் எதிர்பார்ப்புக்களால் மூடப்படாத ஒரு சுதந்திரமனமே நவீன ஓவியத்தை ரசிக்கத் தேவையானது.

இந்த இடத்தில் ஒன்றை அழுத்திச் சொல்லவேண்டியுள்ளது. நாங்கள் விடுதலைக்காகப்போராடும் ஒரு இனம். இந்தப் பிராந்தியத்திலேயே மற்றெல்லாரையும் விட சுதந்திரத்தின் பெறுமதி எங்களுக்குத்தான் அதிகமதிகம் தெரியும்.

நவீன ஓவியம் எனப்படுவது வெளிப்பாட்டுக்கான ஆகக்கூடிய பட்ச சுதந்திரமே.

மரபின் பேராலோ அல்லது வழமைகளின் பேராலோ அல்லது எந்த ஒரு எதிர்பார்ப்பின் பேராலுமோ தனது கைகள் கட்டப்பட்டிராத ஒரு வித பூரண சுதந்திர நிலையைத்தான் நவீன ஓவியன் கேட்கிறான்.

இத்தகைய ஒரு சுதந்திர நிலையைத்தான் அவன் ரசிகனிடமும் எதிர்பார்க்கிறான்.

ஒரு பொருள் இப்படித்தான் இருக்கவேண்டும் இதுதான் நிறம் இதுதான் வடிவம் என்ற எந்தஒரு வரையறைக்குள்ளும் வழமைக்குள்ளும் அடங்கி நிறக அவன் தயாரில்லை.


ஒரு பொருள் என்னவாயிருக்கிறது என்பதோ அதுஎப்படித்தோன்றுகிறது என்பதோ அவனுக்கு முக்கியமில்லை. பதிலாக, ஒரு பொருள் வாழ்தலின் அர்த்தத்தில என்னவாயிருக்கிறது. என்பதே அவனுக்கு முககியம். எனவே வாழ்தலின் அர்த்தத்தில் ஒரு பொருள்பெற்ற திரிபுகள் சிதைவுகளை அப்படியே எதுவித தடைகளுமின்றி வரைவதையே அவன் விரும்புகிறான். அவன் வரையும் சிதைவுகளும் திரிபுகளும் வாழ்தலின் அர்த்தத்தின் பாற்பட்டவை.

உதாரணமாக ஒரு குண்டு வீச்சின் பின் பிணங்களை அடுக்கும் போது யாருடைய கை யாருடைய உடலுடன் பொருத்தப்படுகிறது என்று அநேகமாக யாருக்குமே சரியாகத் தெரிவதில்லை.

தலையும் உடலும் கையும் காலும் சரியாகத்தான் பொருத்தப்படும் என்பதுமில்லை.

சீல் வைக்கப்பட்ட எல்லாச்சவப்பெட்டிகளிற்குள்ளும் குருதி சிந்தும் நவீன ஓவியங்களேயிருக்கின்றன.

இது ஒரு கொடுமையான உதாரணம்தான் என்றாலும் இது தான் மெய்.



அதற்கு முற்கற்பிதங்களற்றசுதந்திர உசார் நிலையிலுள்ள ஒரு மனம் வேண்டும்.

அதை அதுவாக அதன் ஒழுங்கில் அதற்கேயான திரிபுகள் சிதைவுகளோடு ரசிக்க முயலும்போது எல்லாம் தானாய் விளங்கத் தொடங்கும்.

மாறாக, எமக்கு ஏற்கனவே தெரிந்தவைகளை, எமது விருப்பங்களை எதிர்பார்ப்புக்களை அங்கே தேடமுயன்றால் அதில் சிக்குப்பட வேண்டியிருக்கும்.

இதில், ஓவியத்தின் தலைப்பு ஒரு வசதிக்காகத்தான். அதுவே ஒரு முற்கற்பிதமாக ஆகிவிடக் கூடாது. எனது பிள்ளையார்களை யுத்தகாலத்திலேயே வரைந்தேன் என்பதினாலேயே போர் உருவப்படங்கள் என்று பெயரிடப்பட்டது.

பொதுவாக யுத்தம் என்றால் ரத்தம், துப்பாக்கி போன்றவைகளே வரும். ஆனால் இங்கே நான் பிள்ளையாருக் கூடாகவே எல்லாச்சிதைவுகளையும் திரிபுகளையும் காட்ட முற்பட்டேன்.

இந்த சிதைவுகளைத்தான் பிள்ளையார் பிரதிபலிக்கிறார். யுத்தத்தின் நிறம் அவரது நிறமாகிறது. யுத்தத்தின் சிதைவும் திரிபும் அவருக்குமென்றாகியது.

''இயல்பின்மையே இயல்பாகிவிட்ட'' ஒரு வாழ்க்கைமுறை எங்களுக்குரியது.

இதில் எதுவும் அதன் வழமையான ஒழுங்கில் இல்லை. எதுவும் அதன் இயல்பில் அதுவாக இல்லை.

இப்படித்தான் நவீன ஓவியத்திலும் இயல்பான எமக்கு நன்கு தெரிந்த ஒரு ஒழுங்கு இருக்காது. வழமையான ஏற்கனவே தெரிந்த வடிவங்கள் இருக்காது.

ஒரு வித புதிய ஒழுங்கு அங்கேயிருக்கும். அது ஒழுங்கின்மைப்புக்குள்மறைந்திருக்கும் ஒரு புதிய ஒழுங்காயிருககும்.

அதைக்கண்டு பிடிக்கவேண்டும்.

இதில் ஒரு முக்கியமான செய்தி உண்டு.

எமது யுத்தம் வித்தியாசமானது.

யாரும் இதுவரை செய்திராதது.


ஏற்கனவே எங்கேயும் நடந்திராத வகையைச் சேர்ந்தது. இப்படிப்பட்ட நூதனமான ஒரு யுத்தத்திற்குள் இருந்து யுத்தத்தின் வழமையான எல்லாக் குறியீடுகளையும் உதறிவிட்டுதானே யுத்தத்தின் குறியீடாகி பிள்ளையார் வெளிவந்தமை என்பது எமது யுத்தத்தின் தனித்தன்மையே.

இவ்வளவு கடுமையான யுத்தத்திற்குள்ளும் இப்படியொரு செந்தளிப்பான விவகாரம் இருக்கிறது. என்பதே எமது இனத்தின் தனித்துவம் தான், நிகரற்றதனம்தான்

இதையெல்லாம் ரசிப்பதற்கு எமக்குத் தேவைப்படுவது முற்கற்பிதங்களால் மூடப்படாத மிகச்சுதந்திரமான ஒரு மனமே.

* * *

# மனிதனின் பரிணாம வளர்ச்சி



அனைத்து விலங்கினங்களைவிடவும் உயர்ந்ததாக, சிறந்ததாக கருதப்படும் மனிதன் பரிணாம வரலாற்றுப் பாதையிலிருந்து விலகி வெளியேறிச் சென்றுவிட்டான். மனித இனம் இன்று அடைந்துள்ள நிலையும் அதன் போக்கும் எவ்வளவுஅபத்தமானது: அபத்தமானது என்பதும் நம்மில் பலருக்குப் புரிவது கடினமே. எந்தளவிற்கு சிந்தனையற்ற கண்மூடித்தனமானதொரு தனி வரலாற்றை நாம் படைத்துச் செல்கிறோம். மனித இனத்தின் பரிணாம வீழ்ச்சிக்கு மூலகாரணம் 'முன்னேற்றம்' என்பதன் மீதான வெறித்தனமான மோகம்தான்.


முன்னேற்றங்கள் சாதனைகள் எனப் போற்றப்படும் அனைத்து விடயங்களும் காரணிகளாக அமைந்துள்ள அனைத்து அம்சங்களும் சமூக அமைப்பு, கலாச்சாரம், நாகரிகம், மொழிவளர்ச்சி, விஞ்ஞானம் தொழில்நுட்பம் போன்றவை மனித இனத்தை பரிணாம ரீதியாக தேங்கச் செய்துவிட்டன. உண்பது, உறங்குவது, இனம் பெருக்குவது என்ற சுற்றிலமைந்த விலங்கு வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கை அதிகம் வேறுபடவில்லை, மனிதன் பொருட்களை உற்பத்தி செய்தாலும்கூட அது நுகர்வின் தேவை கருதியே இருக்கிறது. இன்றுவரையான அனைத்து விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளும் சாதனைகளும் உண்பது, உறங்குவது, இனம்பெருக்குவது என்ற விலங்குத்தனமான வாழ்க்கையைத் தாங்குவதற்கான வன்முறைகளில்தான் முடக்கப்பட்டு வந்துள்ளன.

உண்மையில் உண்டு உறங்கி, இனம்பெருக்கி காலாதி காலமும் வாழ்ந்து செல்வதென்றே பொதுவான வாழ்க்கைவிதி என்றிருப்பின் ஒரு கல அங்கியான அமீபா போன்ற பிராணியுடன் பரிணாமம் நின்று போயிருக்கும். 400 கோடி ஆண்டுகளாக புவியை ஓர் உயிரியல் ஆய்வு கூடமாகக் கொண்டு பல்வேறு பரிசோதனைகளுக்குப் பிறகு இறுதியாக அது பிரக்ஞையுடன் கூடிய மனிதனை உருவாக்கியிருக்க வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

எனவே பிரக்ஞைப் பரிணாமத்தை நிறைவேற்றிடும் ஓர் ஊடகமாக அல்லது கருவியாகவே மனிதனை இயற்கைஉருவாக்கியுள்ளது. உண்மையில் மனிதன் பரிணாம வரலாற்றில் ஒரு முக்கிய இடைநிலைக் கட்டமே யாவான். மனிதனின் உடலியல் ரீதியான (குரங்கிலிருந்து மனிதன்) பரிணாமம் முடிவுற்றிருக்கலாம். ஆனால் அனைத்து விலங்குகளிடமிருந்தும் வேறுபடுத்திக்காட்டுகின்ற 'பிரக்ஞை' என்னும் பிரத்தியேக உளவியல் பரிணாமத்தைக் கொண்ட மனிதனைப் பொறுத்தவரையில் பரிணாமம் இன்னும் முடிந்துவிடவில்லை.

குரங்கிலிருந்து மனிதன் பரிணமித்தது எவ்வளவு தவிர்க்கவியலாததோ அவ்வளவிற்கு மனிதனிலிருந்து அடுத்தகட்ட உயர்தளப் பிரக்ஞை கொண்ட அதிமனிதன் அல்லது முழுமனிதன் பரிணமிப்பது தவிர்க்க இயலாததாகும். பரிணாமம் என்பது இனிமேல் உளவியல் பரிணாமமே. இதனால் இந்த பரிணாம வாழ்வைத் தாங்குகிற நடத்திச் செல்கிறவகையில் தான் மனிதனது சமூக, பொருளாதார அரசியல் மற்றும் அனைத்துச் செயல்பாடுகளும், ஈடுபாடுகளும் அமைதல் வேண்டும். மனிதன் தனது இயல்பு குறித்து விழிப்புணர்வுபெறாமல்போகும்போது அல்லது பிரக்ஞையோடு பரிணாம வாழ்வை மேற்கொள்ளாது போகும்போது மனித வாழ்வு விலங்கு வாழ்வாகிறது.

விபவி




# புற்று நோயை புரிந்து கொள்ளுங்கள்

புற்று நோயைப் பற்றி பல விதமான கோட்பாடுகள் உருவாகியுள்ளனவே தவிர அதற்கான உண்மையான காரணம் யாருக்கும் தெரியாது. அதுபற்றி இதுவரை நடந்த, நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகள் அனைத்தும் முழுமையாகப் பயனளிக்கவில்லை. இலங்கையில் அண்மைக் காலமாக அதிகளவான மக்கள் மரணிக்கக் காரணமாக இருந்த நோய்களில் இதுவும் ஒன்றாக காணப்படுகிறது. இந்நோய் ஏற்பட்ட ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதிகளவான பணத்தை செலவு செய்வதைவிட அதனோடு வாழ்வதற்கு எமது மனங்களை பழக்கப்படுத்திக் கொள்வதே சிறந்தது என இது பற்றி ஆராய்ச்சி செய்த பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புற்று நோய் என்பது மனிதனின் சகஜமான கலங்கள் (''ஸெல்'') காரணம் எதுவுமின்றி அதி துரிதமாக அகர வளர்ச்சி அடைவதுதான் மனித உடலில் கோடிக்கணக்கான கலங்கள் இருக்கின்றன அவை ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமானமுறையில் ஒழுங்காக வளர்ச்சி அடைகின்றன. சில கலங்கள் (ஸெல்கள்) அசாதாரணமாக வளர்ச்சி அடைந்தால் கட்டிகள் (Tumours) தோன்றுகின்றன. இவை உடலின் எந்தப் பகுதியிலும் அதாவது உச்சி முதல் உள்ளங்கால் வரை எங்கு வேண்டுமானாலும் தோன்றலாம். உடலில் தோன்றும் கட்டிகள் எல்லாமே புற்றுநோய்அல்ல. மாறாக கட்டிகள் தோன்றி அவை வழமையான எமது சிகிச்சைக்கு குணமடையாது நீண்ட நாட்களாக வலியுடன் இருக்குமானால் அது பற்றி நாம் நல்ல வைத்தியரின் ஆலோசனை பெறுவது நல்லதாகும். எமது உடலில் வெளியில் தெரியும்படியாக கட்டிகள் தோன்றலாம் அன்றி உடலின் உறுப்புக்குள்ளேயும் கட்டிகள் தோன்றலாம். அவை நமது கண்களுக்குத் தெரிவதில்லை: ஆனால் அதன் அறிகுறிகள் பல ரூபத்தில் வெளிப்பாடடையும்: அது பற்றி கவனக்குறைவாக இருந்தால் அவை மிக விரைவில் வளர்ச்சி அடைந்து உயிருக்கே ஆபத்தில் முடியலாம். உதாரணமாக மூளையில் தோன்றும் கட்டியின் வெளிப்பாடு கல்லீரலில் தெரியும்.

மேலும் எமக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கு பின்வரும் சில காரணமாக அமையலாம்; அவை வருமாறு;

01) புகை பிடித்தல்

02) புகையிலை சுவைத்தல்

03) சில மருந்துகள்

04) ஓமோன்கள்

05) வைரஸ்

போன்றன புற்று நோய்க்கு காரணமாக அமையலாம்: மேலும் சில நகரங்கள், பிரதேசங்களில் ஏற்படுகின்ற ஒவ்வாத அசாதாரண சூழல் மாற்றங்களாலும் இந்நோய் ஏற்படலாம். இந்நோயை அதன் ஆரம்ப நிலையில் கண்டறிவது சிரமமாயினும் அவை சம்பந்தமான சில அறிகுறிகள் இருப்பின் நல்ல வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று பரிசோதனை செய்து கொள்வது நல்லது. இனி எமது உடலில் தோன்றுகின்ற புற்றுநோயைக் கவனிப்போம்;

1) கர்ப்பப்பை புற்றுநோய்

2) நுரையீரல் புற்றுநோய்

3) குரல் வளையில் தோன்றும் புற்றுநோய்

4) மார்பகப் புற்றுநோய்

5) இரப்பை புற்று நோய்

6) பெருங்குடலிலும், மலக்குடலிலும் தோன்றும் புற்றுநோய்

7) புராஸ்டேட் கோளப்புற்றுநோய்

8) விதை பைகளில் தோன்றும் புற்றுநோய்

9) மூளையில் தோன்றும்புற்றுநோய்

10) உடல்தோல் புற்றுநோய்

11) இரத்தப் புற்றுநோய்

12) கன்னத்தில் தோன்றும் புற்றுநோய்

13) சிறு நீரகத்திலும், சிறுநீர்பைகளிலும் தோன்றும் புற்றுநோய்

இந்நோய் உள்ள ஒருவருக்கு பின்வரும் அறிகுறிகள் தொடர்ந்தும் காணப்படலாம்.

- நாட்பட்ட ஆறாத புண்
- மிக எரிச்சலூட்டும் இடைவிடாத இருமல்
- குரல் மாற்றம் (கட்டிளம் பருவம் தவிர்ந்த)
- உணவு விழுங்குவதில் சிரமம்
- ஏற்கனவே உடலில் எந்தப் பகுதியிலாவது உள்ள மச்சத்திலோ அல்லது சரணையிலோ ஏற்படும் புதிய மாற்றம்.
- நாட்பட்ட அஜீரணம்
- மார்பகத்தில் வீக்கம் (கர்ப்ப காலம் தவிர்ந்த)
- நாட்பட்ட மலச்சிக்கல் வயிற்று போக்கு.
- சிறுநீர்கழிப்பதில்மாற்றம் அல்லது வழி
- வழக்கத்திற்குவிரோதமானகுருதிப்பெருக்கு அல்லது நாட்பட்டு சீழ்வடிதல்
- திடீரென்று உடல் எடையில் ஏற்படும் மாற்றம்; எடை அதிகரித்தல் குறைதல்
- உடலில் எங்கேயாவது புதியகட்டி

தோன்றுவது (சாதாரண கட்டிகள் அன்றி தொடர்ந்து இருக்கும் கட்டிகள்)

- உணவுப்பழக்கத்திலோ, தூங்கும் பழக்கத்திலோஏற்படும்மாற்றம்.

மேற்கூறிய அனைத்து அறிகுறிகளும் புற்று நோயின் அறிகுறிகள் என்று கூறவில்லை; இந்தஅறிகுறிகள் தோன்றி வழமையான சிகிச்சைக்கு குணமடையாதுவிடின், நல்ல வைத்தியரை சந்தித்து பரிசோதனை செய்து கொள்வது நல்லது. எனினும் சில வைத்தியர்களின் அவசரத்தாலும், குறையற்ற கணிப்பாலும் சில தவறுகள் நிகழ்ந்தும் உள்ளன, உதாரணமாக லண்டனைச்சேர்ந்தமானுல்லா என்ற 24 வயது பெண்ணுக்கு மார்பகத்தில் நீண்ட நாட்களாககட்டி. அதனை பரிசோதனை செய்த மருத்துவக்குழுவினர் பரிசோதனை செய்துவிட்டு உண்மையான காரணத்தை கண்டறிந்தார்கள். அதாவது நீண்டகாலமாக வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தப்பட்டபிராக்களைபாவித்து வந்தமையால் ஏற்பட்ட கட்டிகள் என்று கூறப்பட்டது இதனால் கோபமுற்ற அப்பெண், வழக்கு தொடர்ந்து 18லட்சம் நட்ட ஈடாக பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது எனவே நல்ல வைத்தியரை சந்தித்து நோய்களை நிர்ணயம்செய்துகொள்வதில் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும்.

மேலும்புற்று நோய் ஏற்பட்ட அனைவரும் ஒரு சில காலங்கள்மட்டும்தான் உயிர் வாழ்வார்கள் என்பதும் தவறு உதாரணமாக ''வில்லியம்பாய்டு'' என்ற ஒரு சமூகப்பிரசித்தி பெற்ற ஆங்கிலேயடாகடருக்கு கன்னத்தில் புற்று நோய் என்று 1948 இல் கூறப்பட்டு இவர் ஒருசில வருடங்கள் மாத்திரமே உயிர்வாழ்வார் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் 1970இல் 1464பக்கங்களைக் கொண்ட மருத்துவ நூலை எழுதி 20ஆண்டுகள் வரை உயிர் வாழ்ந்துள்ளார் என்பதுஉண்மையே. எனவே இந்நோய் ஏற்பட்ட நாம் பயத்தால் ஒவ்வொரு நாளும் எமது மனங்களை கொல்வதை விட அதனோடு வாழ பழகிக்கொள்வதே சிறந்தது ஆகும்.

மேலும்இவ்வாறுபுற்றுநோய்ஏற்பட்டுபலவருடங்கள்உயிர்வாழ்ந்தவர்கள் பலரின் உதாரணங்கள் உண்டு.

அத்தோடு இந்நோய் சம்பந்தமாக எமது சமூகத்திலும் பல தவறான கருத்துகள் இன்னும் நிலவுகின்றன. ஆதாவது புற்று நோய் ஓர் பரம்பரைநோய், தொற்று நோய் என்றெல்லாம் தவறாக புரிந்து கொண்டுள்ளார்கள். அது பரம்பரை நோயாக இருக்குமோ, தொற்று நோயாக இருக்குமோ என்ற ஐயம் ஏற்படலாம். ஆனால் தவறு; உதாரணமாக மார்பக புற்று நோய் ஒரே குடும்பத்தில் பாட்டிக்கு, மகளுக்கு, பேத்திக்கும் மூவருக்கும் உண்டாகலாம் இது ஓர் தற்செயல் நிகழ்வே. இது இவர்களுக்கு பின்வருமாறு ஏற்படலாம். ஒருவருக்கு உணவால் ஏற்பட்டிருக்கலாம் மற்றவருக்குதண்ணீரால் ஏற்பட்டிருக்கலாம், இன்னொருவருக்கு இரப்பை புண்ணால் ஏற்பட்டிருக்கலாம்; எனவே புற்று நோய் ஓர் பரம்பரை நோயுமல்ல அது மற்றவர்களுக்கு பரப்பும் தொற்று நோயுமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நோய்க்கு பூரணபயனளிக்கக் கூடிய சிகிச்சை முறை அரிதாகவே காணப்படுகின்றன. மேற்கொள்ளப் படுகின்ற சிகிச்சை முறைகளும் அதிகளவான பணம் செலவு கொண்டதாகவே காணப்படுகின்றன. இருப்பினும் இதற்கு அறுவை சிகிச்சை கதிரியக்க சிகிச்சை முறைகள்உள்ளன. இருந்தும் அவை பூரணபயன் தருவதில்லை புற்றுநோய் ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் ஓரளவுக்கு குணமாக்கலாம். ஆனால் முற்றிய நிலையில் கண்டறியபபட்டால் குணப்படுத்துவது சிரமமாகும்; எமது வன்னி பிரதேசத்தில்கூட அண்மைகாலமாக பல மரணங்கள் இந்நோயினால் ஏற்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. புற்றுநோய்க்கு அதிகளவு பணச்செலவுடன் சிகிச்சை செய்யபபட்டு ஒரு சில நாட்களுக்குள் இறந்தவர்களும் உண்டு, மாறாகபோதியளவுசிகிச்சை செய்யப்படாமல் அதனோடு பல காலங்கள் வாழ்ந்தவர்களும் உண்டு இருப்பினும் நாம் இந்நோய் ஏற்படுவதற்கான, தவிர்த்துக்கொள்ள கூடிய காரணங்களை விடுத்து, வரமுன் காப்பதே எல்லா நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை முறையாகும்.

# உள்ளமும் உள்ளது

பெரும்பாலானவர்களின் உள்ளங்களில் குறை என்னும் கொடுநாகம் குடியேறி, அவர்களைக் கொத்திக்கொத்தி மெல்லச் சாகடித்துக் கொண்டே இருக்கும்;

உடலின் ஒரு பகுதி ஊனமாக இருக்கிறதே என்றகுறை; தனக்குக் குழந்தை இல்லையே என்கிற குறை; வசதியாக வாழ முடியவில்லையே என்கிற குறை, இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்,

தாங்களாக எதையும் எண்ணி வருத்தப்படாவிட்டாலும் இவர்களின் மனப்புண்ணைப் பதம் பார்க்க இந்தச் சமுதாயத்தில் ஏராளமான வேல்கள் உள்ளன.

அவர்கள் உள்ளதைத்தானே சொல்கிறார்கள் என்பதாக எண்ணும் மனப்பக்குவத்தை விரைவில் வளர்த்துக் கொண்டுவிட வேண்டும்; அத்தகைய மனப்பக்குவந்தான் வேல்களைத் தாங்கும் கேடயமாக அமையும்,

இத்தகையவர்கள் மன நிம்மதி பெற இரண்டேவழிகள் தாம் உள்ளன; ஒன்று, அக்குறை நீக்கச் சாத்தியக்கூறுகள் எவையேனும் இருப்பின் அவற்றை முழுமுயற்சியுடன் மேற்கொள்வது இரண்டாவது, மாற்றமுடியாத- வழிகாண முடியாத குறையெனின், இது, இயற்கையின் விதியென-நியதியென எண்ணி, அதைச் சரியென ஏற்றுப் பொறுத்துக் கொள்ளவும் சகித்துக்கொள்ளவும் முன்வருவது'

நிரந்தரக் குறையை நினைத்து வருந்துவது-குழப்பமடைவது ஆகியவற்றால் என்ன பலன் விளையப்போகிறது? ஒன்றுகூட இல்லை,

வலக்கை, வாதத்தால் விழுந்துவிட்டால் அவரது இடக்கை இருமடங்கு பலமுடையதாய் ஆகிவிடுகிறது. ஒன்றும் கேட்காவிட்டாலும் வாய் உச்சரிப்பை வைத்தே பேசியவற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல், காது கேளாதவர்களுக்கு அமைந்து இருக்கிறது.

ஆக. ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது.
அதாவது,

உடல் உறுப்புகளின் ஆற்றலானது ஒன்றின் இழப்பை இன்னொன்று ஈடுகட்டுவதாக உள்ளது.
அதேபோலத்தான் மனமும்.
உடல் குறையாயினும் உலக வாழ்க்கையில் ஏற்படும் குறையாயினும் அதைப் பழக்கப்படுத்திக் கொண்டு தாங்கிக்கொள்ளக்கூடிய பலம் மனதிற்கு இருக்கிறது அதுமட்டுமல்ல, இக்குறைகளோடு மகிழ்ச்சியுடனும் வாழ முடியும். இதற்குச் சற்று அறிவுபூர்வமான கண்ணோட்டம் தேவை

விரும்பியது கிடைக்கவில்லையா?
கிடைத்ததை விரும்புவோம்.
நினைத்தபடி நடக்கவில்லையா?
நடப்பதை நினைப்போம்!

லேனா தமிழ்வாணன்




## சிறுவர் கதை...

## நன்றி மறந்தால்..

அடர்ந்த காட்டின் நடுவில் சிங்கம் ஒன்று மரத்தில் ஏறிவிளையாடிக் கொண்டிருந்தது. அப்போது தவறுதலாக சிங்கம் கீழே தவறி விழுந்து விட்டது. மரக்கொப்பொன்று காலில் ஏறியதால்சிங்கத்தால் எழும்பி நடக்கமுடியவில்லை. வேதனையில் இரண்டு நாட்களாய் கத்தியும் எவரும் வந்து சிங்கத்தை காப்பாத்த வில்லை.

சிங்கத்துக்கு நல்ல பசி- அப்போது அந்த வழியால் குரங்குப்பிள்ளை பாடிப்பாடி வந்து கொண்டிருந்தது. குரங்குப் பிள்ளையாரை கண்டதும் சிங்கம் கத்தத் தொடங்கியது.

''குரங்காரே... என்னைக் காப்பாத்து காலில் ஏறிய கட்டையை எடுத்துவிடு'' என்று நடந்தவைகளை குரங்குப் பிள்ளையாருக்கு சிங்கம் கூறியது
குரங்குப்பிள்ளையார் கிட்டை போகப்பயப்பிட்டார்.

''குரங்காரே! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். பயப்பிடாதீர்'' என்றது.

''உன்னை என்னென்று நம்பி நான் கிட்டை வருவது?'' என்றது குரங்குப்பிள்ளையார்.

''சத்தியம் செய்கிறேன் இரக்க குணம் கொண்டவராயிற்றே நீங்கள்! என்னை காப்பாத்துங்கள்'' என அழுதது சிங்கம்.

குரங்கார் சிங்கத்தின் சத்தியத்தை நம்பி சிங்கத்தின் காலில் ஏறிய கட்டையை இழுத்து எடுத்தது. சிங்கத்துக்கு இப்போது சுகமாய் இருந்தது. எழும்பி 'அப்பாடா'' என்று குரங்கை பாய்ந்து பிடித்தது.

''ஐயோ... என்னைக் காப்பாத்துங்கள்...'' என குரங்கார் பெரிய சத்தமாய் கத்தினார்.

''நான் இரண்டு நாட்களாகச்சாப்பிடவில்லை. எனக்கு நல்லபசி'' என்றது சிங்கம்.

''ஐயோ இது அநியாயம். நீ சொன்னது என்ன? செய்வது என்ன?'' எனறுகத்தினார் குரங்குப்பிள்ளையார்.

''நியாய அநியாயம் பார்த்தால் நான் பட்டினியால் சாகவேண்டியது தான்.'' என்றது சிங்கம் அப்போது அந்த வழியால் கழுதை ஒன்று வந்தது.

''ஐயோ கழுதை அண்ணா. இந்த அநியாயத்தைக் கேளுங்கள்'' என்று குரங்குப்பிள்ளை நடந்தவைகளை கழுதைக்குக் கூறியது.

''நியாய அநியாயத்தை மனிதர்களே பார்ப்பதில்லை. எனக்கு வயதாகி விட்டது. உனக்கு அருகில் வந்தால் என்னையும் சிங்கம் பிடித்துவிடும்'' என்று சொல்லிக் கொண்டே கழுதை ஓடியது. அப்போது மான் வந்தது.

''மானாரே... மானாரே... நீங்களாவது என்னைக் காப்பாத்துங்கோ'' என்று குரங்குப்பிள்ளை கெஞ்சியது. உடனே மானார்

''சிங்கராசாவே இப்படி நன்றி மறக்கலாமா? என்றது.

''மானாரே! என்னுடைய பசி தெரியுமா! உனக்கு'' என்றது சிங்கம் கால்களால் குரங்கை அமத்தி வைத்தபடி.

திடீரென ஓடி வந்த புலியார்

''எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்''. என்றபடி குரங்குப்பிள்ளையாருக்கருகில் சென்றது.

''புலியாரே உதவிசெய்யப்போய் உயிரேபோகிறது எனக்கு. என்னை காப்பாத்து புலியாரே!'' குரங்கார் அழுதார்.



''யாரிடம் கதைவிடுகிறீர் குரங்காரே...'' என்று புலி கோபமாய் குரங்குப்பிள்ளையாரை உறுக்கியது.

''காப்பாத்தினது உண்மைதான் புலியாரே!'' குரங்கார் சத்தியம் செய்து கூறியது. புலியார் சிங்கத்தைப் பார்த்துக் கேட்டார்

''சிங்கராசாவே... நீ எப்படி மரத்தில் இருந்து விழுந்து காலில் கட்டை ஏறினது என்பதை செய்து காட்டும்'' என்றது. உடனே சிங்கம் குரங்கை விட்டு, மரக்கிளையில் ஏறி குதிப்பதற்குப் பயப்பிட்டது. புலியார் மரத்தில் ஏறி சிங்கத்தை தள்ளி விட்டது. சிங்கத்தின் மற்றைய காலில் வேறு ஒரு கட்டை ஏறியது,

''குரங்காரே! ஓடிப்போய் விடும்: இந்த நன்றி இல்லாத சிங்கம் இப்படியே கிடக்கட்டும்.'' என்றது. ''நன்றி அண்ணா'' என்று குரங்கு ஓடியது.

■ - பிரஷகி

## பள்ளி வார்த்தை

எங்கள் பள்ளியில் நல்ல ஒழுக்க வகுப்பு தினமும்அரை மணிநேரம் நடக்கும். அதில் முயல் ஆமையிடம்தோற்ற கதையைச் சொன்னார் ஆசிரியர். பிறகு ஒருமாணவனை எழுப்பி ''முயல் ஆமையிடம் தோற்றதுஏன்?'' என்று கேட்டார்.

மாணவன் எழும்பி ''முயலாமையினால் தோற்றது.'' என்றான். ஆசிரியர் கோபமாய் ''முயல் ஆமையிடம் தோற்றது என்று தான் நானேசொல்லி விட்டேனே. காரணத்தை சொல்'' என்றார் ஆசிரியர்.

''சேர்... முயலாமை, அதாவது முயற்சி செய்யாததால் தோற்றது'' என்று கூறினான் மாணவன்-ஆசிரியர் சற்று நேரம் பேசாமல் நின்றார்.



## ரதனும் சுதனும்

ரதன்:

சலவை சோப்பை குளியலுக்குப் பயன்படுத்தக் கூடாது, ஏன் தெரியுமா?


சுதன்:-

கொழுப்பு அமிலத்துடன் காரத்தைச் சேர்த்துசூடு படுத்தும் போது சோப்பு கிடைக்கிறது. விலங்கு கொழுப்புடன் சோடியம் ஹைடிராக்ஸைடு என்ற காரத்தைச் சேர்த்து சலவை சோப்பு தயாரிக்கப்படுகிறது சோடியம் ஹைடிராக்ஸைடு என்பது அதிக செறிவு பெற்ற வலிமையுள்ள கார மூலமாகும். இது உயிரி செல்களை அரிக்கும் தன்மை பெற்றது. ஆகையால் இதனால் தயாரிக்கப்பட்ட சோப்பைக் குளியலுக்குப் பயன்படுத்தக்கூடாது. குளியல் சோப்பில் பொட்டாசியம் குளோரைடு (KOH) எனும் மென்காரத்தைப் பயன்படுத்து கிறார்கள். இது மேனிக்கு கெடுதல் விளைவிப்பது இல்லை, இப்ப விளங்குதா?

## புதிர் -9

(விளையாட்டுக் கணக்கு)


(1)
கீழ் கண்ட சதுரத்தில், எந்த வரிசையில்-கீழிருந்து மேலாக, பக்கவாட்டில், குறுக்கு வாட்டில் கூட்டினாலும் 15 வரும்படி எண்களை இட்டு நிரப்ப வேண்டும். ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன் படுத்தக் கூடாது.



(2)
அந்தக் குளத்தில் சில மலர்கள் இருந்தன. சில பறவைகள் பறந்து வந்தன. ஒவ்வொரு மலரிலும் ஒவ்வொரு பறவை அமர்ந்த போது ஒரு பறவைக்கு மட்டும் இருக்க, மலர் கிடைக்க வில்லை. ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு பறவைகளாக அமர்ந்தால் ஒரு மலர் மீதமிருந்தது அப்படியானால் மலர்கள் எத்தனை; பறவைகள் எத்தனை?

## புதிர் -07 இன் விடைகள்

(1)



(2) எல்லா எண்களும் அப்படித்தான்.

## சரியானவிடைகள் எழுதியோர்

| | |
|---|---|
| சு: இன்பன் | த. டர்சா |
| ம: காண்டீபன் | சு. மேகலை |
| க. கஜன் | அ. மதிவாணி |
| தே: நீலாம்பரி | பி. மாலி |
| ர. அச்சுதன் | வே. கர்ணன் |

பரிசுக்குரியவர்;- ம. பிரகலாதன்
சிவன்கோவில் வீதி
பருத்தித்துறை.

## கடல்மேல் பிறக்கவைத்தான் எங்களை

## கண்ணீரில் இறக்கவைத்தான்...

# இயல்பு நிலைக்கு வாழ்வு திரும்பவில்லை

○ கடற்தொழிலாளர்கள்

போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ள போதும் எமது வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. நாம் இன்னும் மந்தைக் கூட்டத்தைப் போலவே நடத்தப்படுகிறோம் என்றார். யாழ்ப்பாணம், குருநகர்ப்பகுதியைச்சேர்ந்த மீனவர் ஒருவர். மீன்பிடிக்கும், நேரத்தையும், இடத்தையும் இன்னும் எங்களால் தீர்மானிக்க முடியவில்லை. சொந்த ஊரில் நாம் விரும்பும்பாதையால் கூட சென்று வரமுடியாத படி, பல வீதிகள் இன்றும்மூடப்பட்டே உள்ளது. இராணுவ முகாங்களுக்குள் கைதிகளைப் போலவே வாழுகிறோம் என்று மேலும் குறிப்பிட்ட அவர், தமது பெயர் குறிப்பிட வேண்டாம் என்று அச்சத்தோடு தெரிவித்தார்: தமது பகுதியில் இளைஞர்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதை குறிப்பிட்ட அவர் பல குடும்பங்கள் ஜீவனோபாயத்துக்கான ஆதாரங்களை இழந்து துன்பப்படுவதாகவும் தெரிவித்தார்.

யாழ். கடலேரியின் கரையோரம் இரட்டை முட்கம்பி வேலிகளும், இராணுவ காவலரண்களும் என காணப்படுவதோடு, மீனவக்கிராமங்களின்மறு அந்தலையான கண்டி வீதியைஅண்டிய ஏனையவீதிகளிலும் தொடரான இராணுவ காவல்நிலைகள் உள்ளன. இன்றும் பாசையூர், கொழும்புத்துறைக்கு அப்பால், புதிது, புதிதாக இராணுவக்காவல் நிலைகள் நெருக்கமாகப் போடப்படுகின்றன என்ற செய்திகள் அங்கிருந்து வெளியாகிறது.

இப்பகுதி மீனவர்கள்அதிகாலை இரண்டு மணிக்கு மீன்பிடித்தலுக்காக கடற்படையின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட போதும், காலை ஐந்து மணியின் பின்பே கடலில் இறங்க அனுமதிக்கப்படுகின்றனர். பிற்பகல் 3 மணிக்கு முன் திரும்பி விட வேண்டும் எனப்பணிக்கப்படும் இவர்களால் நாள் ஒன்றுக்கு ஐந்து அல்லது ஆறு கிலோ மீன்களேபிடிக்க முடிகிறது. பிற்பகலில் ஆழ்கடலுக்குச்சென்று அடுத்த நாட்காலையில் திரும்பிய முன்னைய காலங்களில் ஐந்நூறு கிலோ மீன்கள் சராசரியாகப்பிடிபடுவதை அவர்கள்நினைவு கூர்ந்தனர். தற்போது ஆழ்கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, மீன்பிடி வள்ளங்களுக்கு இயந்திரங்களும் உபயோகிக்க முடியாது உள்ளது.

யாழ் குடாநாட்டின் கரையோரங்களில் 107மீன்பிடி கிராமங்கள் பரவியிருந்தன இன்று அவற்றுள் பலவற்றில் குடியிருக்கும் அனுமதி இராணுவப் பாதுகாப்பு வலயம், உயர் பாதுகாப்பு வலயம் எனக் காரணங்கள் காட்டப்பட்டு மறுக்கப்பட்டுள்ளமையால் பல மீனவக் குடும்பங்கள் அகதிகளாகி, தொழிலையும் இழந்து துன்பப்படுகின்றன. பலர் பல்வேறு வகையான சிறு தொழில்கள் மூலம் உயிர் வாழுகின்றனர். 1987இல் ஒரு இலட்சத்து ஆறாயிரமாகக் காணப்பட்ட யாழ். குடாநாட்டின் மீனவர் எண்ணிக்கை இன்று 48ஆயிரமாகக் குறைந்து விட்டது. 1983இல் 49ஆயிரம் மெற்றிக் தொன்களாக காணப்பட்ட குடாநாட்டின் மீன் உற்பத்தி இன்று இரண்டாயிரத்து நானூறு மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்துள்ளதை யாழ்ப்பாணம் கடற்றொழில் விரிவாக்க அலுவலக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. யாழ். குடாநாட்டின் பொருளாதாரத்தில் வலுவுள்ள காரணியாக இருந்த கடற்றொழில் இன்று மிக மோசமாகச் சீரழிக்கப்பட்டு விட்டது; மீனவர்களின் குரல்களும் யாருடைய காதுகளிலும் விழவில்லை.

ஏற்கனவே குடாநாட்டுக் கடற் பிராந்தியத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களைச் சுரண்டும் நிலை காணப்பட்ட போதும் தற்போது முல்லைத்தீவு, வடமராட்சிக் கடற்பரப்புகளில் சிங்கள மீனவர்களும் சுதந்திரமாக, வெளிச்சத்துடன் நேரத்தடை, எல்லைத்தடை எதுவுமே இல்லாது மீன்பிடித்தொழிலில் ஈடுபட குடாநாட்டு மீனவர்கள் என்பதற்காகவே தடுக்கப்பட்டுள்ளனர். இது தொடர்ந்தால் தாம் வெகுஜனப் போராட்டத்தை தொடரப் போவதாக வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

## அன்ரன் அன்பழகன்


இதேவேளை திருகோணமலை மட்டக்களப்பு பகுதிகளில் கடற்படையினரால் அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலேயே மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப் படுவதோடு, அப்பாவி மீனவர்கள் மீது தாக்குதலைநிகழ்த்தி விட்டு விடுதலைப்புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாகப் படைத்தரப்புஅறிக்கைகள் விடுக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.2 சரத்தின்படி இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் வலிந்த தாக்குதல்கள் தடை செய்யப்பட்டு தற்காப்பு நிலையில் மட்டுமே செயற்படும் படி கோரப்பட்டுள்ள நிலையில், (Prohibited military Operations including offensivenaval operations வேண்டு மென்றே புரிந்துணர்வு உடன்படிக்கையை முறித்துப் போடும் மனநிலையில் கடற்படையினர் உள்ளனரா எனும் சந்தேகத்தை எழுப்புகிறது. கடந்தவாரம் வாகரைக் கடற்பரப்பில் இருவர் சொல்லப்பட்டதுடன், பலர் படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். திருகோணமலையிலும் தமிழ் மீனவர்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல்கள் நிகழ்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

பாதுகாப்புப் பணியில் முதல் நிரையில் பணிபுரியும் கடற்படையினர் எப்போதுமே அப்பாவித்தமிழ் மீனவர்களை இலக்காகக் கொண்டு காவு கொள்வது முதலாம்: இரண்டாம், மூன்றாம் ஈழப்போர்களில் பதிவாகியுள்ளன: மேலாண்மை மிகு கடற்புலிகளின் வளர்ச்சியும் தாக்கும் திறன்களும் இவர்களுக்கு ஊட்டிய எரிச்சலின் விளைவோ இதுவென நினைக்கத் தோன்றுகின்றது:

சிறீலங்கா கடற்படையினரின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஏற்படுத்தும் உயிரிழப்புகள், ஜீவனோபாய தொழிலிழப்புக்கள் கடற்கரைக்கிராமங்களில் குடியிருக்கும் உரிமை இழப்புகள் பற்றி சமாதான முன்னெடுப்புகளின் பொறுப்பில் உள்ளவர்கள் கணக்கில் எடுக்கா விட்டால் விளைவுகள் ஒருபோதும் மகிழ்ச்சிகரமானவையாக இருக்க மாட்டாது என்பதே வரலாறு கடந்த காலங்களில் கற்றுத்தந்த பாடமாகும்.

---

## தமிழ்க்கவி



# சொல்லியே தீரவேண்டும்---

என்னவோ போங்கோ மனங்கேளாம சில கதையளக் கதைக்க வேண்டியிருக்கு. பின்ன இவவுக்கு ஏன் இந்த வேலை எண்டு நீங்கள் கேக்கலாம் மனசு கேக்குதில்லையே... எங்கட பூமணியக்காவின்ர நடுவிலான் அண்டைக்கு மிதிவெடியில காலவிட்டு சாகயில்லையே. என்ன விளங்காத மாதிரிப் பாக்கிறியள். போனகிழமை பேப்பரிலுமெல்லே போட்டவங்கள்: அ... அவன்தான் பின்ன செத்தவீட்டுக்கு போனாப்போல... பின்னேரவசுவ விட்டிட்டன் இனி நாளைக்குத்தான் எண்டிட்டு நிண்டிட்டன், பூமணியக்காவப் பாக்கேலா... மனிசி குழறிக்குழறியே தொண்டையடைச்சுப் போய்க்கிடக்கு தேப்பனப்பற்றிக் கேக்கப் போறியளே. அவன் பாவி பிள்ளையைச் சாகக்குடுத்திட்டு காசுக்கோடு பட்டுத்திரியிறான் பின்ன இந்த நாளயில...

''நாளைக்கு காடாத்தையும்எட்டையும் சேர்த்து செய்யப்போறம் வந்த நீ இனி எங்க போய்வரப்போறாய். நிண்டுபோ'' எண்டான். பின்ன நிண்டிட்டன். சொன்னா நம்பமாட்டியள் செத்த வீடும்... எட்டுமா... இருவத்தைஞ்சு முடிஞ்சுதெண்டான். மாரியம்மாளே! இதென்ன வெள்ளிடி மலையான மலையைச் சரிச்சுப்போட்டு சிலவும் இப்படிஎண்டா.. என்ன இந்த சமுதாயம்: கண்கெட்டுப்போய் நிக்குது.

அந்த நாளயில ஒரு செத்த வீடெண்டா இப்படியே. சும்மாவே சொல்லுறது 'செத்தவன் வாயில மண்' 'இருந்தவன் வாயிலசோறு' எண்டு. எனக்கு நினைவு தெரிய செத்தவீடெண்டா எங்கட ஆக்கை செத்த நேரம்தான். 1955 சீவன் போகமுதலே சனம் வந்திட்டுது. வீடோதுங்க வைச்சுபந்தல் போட்டு, வெத்தில பாக்கு, வீடிசுருட்டு, நெருப்புபெட்டி, சட்டி, முட்டி, சணல, வெள்ளைக்கடதாசி, மினுங்கல் கடதாசி' சந்தனக்கட்டி அரபபு நவதானியம், சந்தனக் கட்டை. பெட்டி எல்லாம் நாலுபேர் கூடிப் பட்டியல் போட்டு வாங்கியாச்சு சனம் வரவர ஆம்பிளையளண்டா அப்பு முன்னுக்குபபோய் கும்பிட்டு கையில சுருட்டோ வீடியோ குடுத்து அழைப்பார். பொம்பிளையளெண்டா வழியில எதிர் கொண்டு கை குடுத்து வாசலுக்க நிண்டு வர வேற்று அழுதபிறகு சவத்துக்கு கிட்ட இருந்து அழுது முடிப்பினம். இப்படி இஞ்ச இந்த அலுவல்கள் நடக்க ஒரு பக்கம் பாடை கட்டிற வேலையளை ஆம்பிளையள் செய்வினம்.

சவமெடுத்து, வீடுவாசல் மெழுகி தோஞ்சு முடிய, அயலுச்சனம் சோறுகட்டிக்கொண்டு வந்திடும். காலம ராசாவீட்டுக்காறர் எண்டா, மத்தியானம் சுந்தரத்தார்வீடு, ராச்சாப்பாடு அய்யாத்துரையண்ணையாக்கள். இப்படி காடாத்து மட்டும் வீட்டில அடுப்பு மூட்டக்கூடாதாம். எண்டு அயல்லயிருந்தே... சாப்பாடு வரும் சாப்பாடு வரவர வீட்டில குறிச்சு வைப்பினம். அது பிறகு ஒரு காலத்தில திரும்பிக்கட்ட வேணும் எண்டு. பின்ன காடாத்துக்கும், எட்டுக்கும் எல்லாருக்கும் சொல்லுறதுமில்ல. எல்லாரும் வரவும் மாட்டினம். அது இழவுகாத்த வைக்கு மட்டுந்தான். இழவு காத்தவை எண்டா செத்த வீட்டிலயிருந்து இண்டைவரையும், ராத்துணையா வீட்டில வந்து தங்கினவை. அவையும் வரையுக்க வெறுங்கையா வரமாட்டினம் ரெண்டு கொத்துக்கு குறையாத அரிசி தேங்காய், மரக்கறி எண்டு ஒரு பையில போட்டு கொண்டு வருவினம் வந்த பெண்டுகள் கூடமாட இருந்து சமைச்சு படைச்சு வீட்டுக்காறரோட சேர்ந்து சாப்பிட்டு. பலதும் பத்தும கதைச்சு. இழப்பு நடந்த வீட்ட ஒரு இயல்பான சூழலுக்க கொண்டு வருவினம். அதுபோல அந்திரட்டியும்.

வாறவ அரிசி, மரக்கறி சாமானுகள், வெற்றிலை, பாக்கு, சுருட்டு எண்டும் கொண்டு வருவினர், வெறுங்கையோட போக மாட்டினம், சாகக்குடுத்தவை வீட்டில பொருள் பண்டக்கஸ்ரமும் வரக்கூடாது. எண்டது தான் நோக்கம். அது அந்தக்காலம் அட இப்ப என்னவெண்டால் ..

வீட்டுக்காறர் எட்டு சிலவுக்கு ஆடு அடிக்க வேண்டியிருக்கு அவளவு சனம். தின்ன வரும். சமையலும் ஆள்பிடிச்சுத்தான் வைச்சிறக்கினம் வாறவை கையாட்டிக் கொண்டு வந்து விருந்து கொண்டாடிப் போகினம். எனடா இந்தச் சனம் எண்டதை பூரணியின்ர மனிசன் சொல்லுது, 'அ விடக்காபிள்ளையான பிளளை போட்டுதாம். சிலவப்பாத்தென்னவேற என்னசெய்யப்போறம். பிள்ளைக்கு'' எண்டு அழுறான்.

என்ன மனிசத்தனம் எட ஒரு பிறந்தநாள் விழாவெண்டா சும்மா போவியளோ. ஒரு கலியாண வீடு, சாமத்திய வீடெண்டா சும்மா போவியளோ அதென்ன சந்தோசம் கொண்டாறவைக்கு சன்மானம்பண்ணுறியள்? சாகக்குடுத்தவனுக்குவிழுந்த மாட்டில குறி சுட்டமாதிரி மேலும் கடன் ஏத்திறியள்.

நீங்கள் நினைப்பியள் அது சரிஇந்த சம்பிரதாயம் என்னண்டு மாறினது. எண்டு சில நேரம் இதெல்லாம் தெரியாத இளைய தலைமுறை கேக்கும் உப்பிடியும்நடந்ததோ எண்டு. ஆனா இந்த கலாச்சார மாற்றத்துக்கு... சிறிலங்கா அரசாங்கந்தான் காரணம் எண்டா நீங்கள் அதிசயப்படுவியள்; அதுதான் உண்மை.

முன்னை 1970களில அரைக்கொத்தரிசித்திட்டத்தை சிறிமா அம்மா கொணந்தா அப்பதான். அப்பதான் பாருங்கோ. ''நான் கண்ட இடத்திலும் கை நனைக்கிறதில்ல'' எண்டவையட கெப்பரும் அடங்கினது. ஒழுங்கா சமைச்சுத்திண்டு பானையில பழஞ்சோறு மிஞ்சுற வீடு ஒண்டுமேயில்லை. அப்படி செத்த வீடு எட்டு வீடெண்டா கூப்பிடாமலே போய்ச் சாப்பிடுற பழக்கமும் அப்பதான் வந்தது. காணிவித்துசெத்தவீடு செய்கதும், சவமெடுத்தகையோட அடுப்பு மூட்டினதும் அப்பதான். ஆனா அந்த நேரம் ஒண்டு கலியாண வீடுகள் எல்லாம் கமுக்கமாக நடந்தது.

இப்ப என்ன: 'நித்தம் சாவாருக்கு நித்தம் அழுவாருண்டோ' எண்ட மாதிரியோ, அல்லது, அயல்ல இருக்கிறவன் அகதி எண்டதாலயோ இந்தப் பழக்கத்தை கைக்கொள்ள மனம் துணியேல்ல; ஆனால் நீங்கள் ஒண்டை நினைக்க வேணும் எங்கயிருந்தாலும் தமிழன் தனர பண்பாட்டை இழக்கக்கூடாது மனிதத்தன்மையை இழக்கக்கூடா, வேரோடி விளாத்தி சாத்சாலும்தாய் வழி தப்பாதெண்ணுவினம்.' ஒரு காலத்தில எங்கட பண்பாடு நசுக்கப்பட்டிட்டுது. அதுக்காக அதை கைவிடக்கூடாது.

பூரணியக்கா தாலியவித்தும் காலைல நிண்ட ஒறணை மாட்டையும் வித்துப்போட்டா. செத்தவன் சாக, இருக்கிறவை இனி என்ன மண்ணைத் தின்னுறதே. இல்ல யோசிச்சுப் பாருங்கோ இழவு நடந்த வீட்ட போகேக்க அவயளுக்கு ஒரு ஆறுதலக் குடுக்கத்தான் போறம் வாயால மட்டுமில்ல கையாலும் குடுங்கோ. அதுதான் எங்கட தமிழ்ப்பண்பாடு.

சுவையுலகின் ராஜா
ராஜா கிறீம் ஹவுஸ்...

ஐஸ்கிறீம் வகைகள்

○ சொக்லட் கிறிப்ஸ்
○ ஜெலி ஐஸ்கிறீம்
○ ராஜா ஸ்பெசல் ஐஸ்கிறீம்
○ புருட்சலட் ஐஸ்கிறீம்
○ நட்ஸ் ஐஸ்கிறீம்
○ வனிலா ஐஸ்கிறீம்
○ சொக்லட் ஐஸ்கிறீம்

★ மற்றும் சுவையான ★
சிற்றுண்டி வகைகள்
★ அனைத்திற்கும்...... ★

ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஐஸ்கிறீம் வகைகள்

★ சொக்லட் கிறிப்ஸ்
★ புருட்சலட் ஐஸ்கிறீம்
★ சொக்லட் ஐஸ்கிறீம்
★ கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ ஜெலி ஐஸ்கிறீம்
★ நட்ஸ் ஐஸ்கிறீம்

மற்றும்

மட்டன் றோஸ் · கட்லட் · பற்றிஸ் · கேக் · மஸ்கட்

பீடா மற்றும் குளிர்பானவகைகள் யாவற்றையும் சுவைத்துமகிழ
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

கல்யாணி கிறீம்ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

COMITE INTERNATIONAL GENEVE

மே - 08

# செஞ்சிலுவை தினச் செய்தி...

இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவானது செஞ்சிலுவை சர்வதேச இயக்கத்தின் அங்கமான ஏனையோருடன் இணைந்து உலக செஞ்சிலுவை தினத்தை கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது.

எச். ஐ. வி. வைரஸ் காரணமாக ஏற்படும் எய்ட்ஸ் எனும் கொடிய தொற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டோரின் பரிதாப நிலையை இவ் வருடம் சர்வதேச செஞ்சிலுவை இயக்கம் கோடி காட்ட விரும்புகிறது. போர் நடக்கும் நாடுகளில் அடிக்கடி எய்ட்ஸ் நோயின் தாக்கம் மோசமடைந்து வருவதை, போர்ப்பாதிப்பிற்குட்பட்ட பிரதேசங்களில் பணிபுரிகின்ற செஞ்சிலுவை சர்வதேசக்குழுவானது நன்கு அறியும். இந்தநோய் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல நாடுகளில் வன்முறைகளுக்கும் அதன் மீள முடியாத பாதிப்புக்களுக்கும் ஒரு ஊக்குவிக்கும் காரணியாக அமைகின்றது.

போர்களானது வழமையாக இருக்கக் கூடிய சுகாதாரக் கவனிப்பு முறைகளை இல்லாமல் செய்வதோடு, எய்ட்ஸினால் துன்பப்படுவோர்களுக்கு கிடைக்கக்கூடிய கவனிப்புக்களை இடையூறு செய்வதும், இந்நோய்ப் பரவலை குறைப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை பாதிக்கவும் செய்கின்றது. போர்க்காலங்களில் வருந்தத்தக்க அம்சமாக உள்ள பாலியல் வல்லுறவுகளும் இந்நோய் பரவுவதற்கு ஒரு காரணியாக இருக்கிறது. இது வல்லுறவுக்குட்பட்ட தாய்மாரையும் அதேவேளை, அதே தாய்மார் பெற்றெடுக்கும் குழந்தைகளையும் பாதிப்பதாக உள்ளது.

போர்கள் மக்களை இடம்பெயர்த்தி குடும்பங்களை சிதைவுறச்செய்கிறது. போர் காரணமாக சொந்த வீடுகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு நிலைதளர்ந்துள்ள நிலையில், எய்ட்ஸ் நோயினால் வருந்துவோர்களின் தேவைகளை, உடல் உள ரீதியாக அவர்களுக்கு அவர்களின் குடும்பங்களினால் கவனமெடுத்து செய்ய முடியாதிருக்கிறது. மனிதாபிமான நிறுவனங்களின் வேலைப்பணி இங்கு பாரிய தேவைக்கு உட்பட்டிருக்கிறது.

இலங்கையில் செஞ்சிலுவை சர்வதேசக் குழு, 1989இல் பிரசன்னமாகியிருந்து, போரில் ஈடுபடாத பொது மக்களை பாதுகாத்தலிலும், நடுநிலை இடையீட்டாளராக செயற்படுவதிலும் தன்னுடைய பணியைத் தொடர்கிறது. ஆயுதங்கள் அமைதி நோக்கி கீழே வைக்கப்பட்டதிலிருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு கடந்த கால போர் காரணமாக காணாமல் போன பலரை தேடும்பணியில் அடியெடுத்து வைத்திருக்கின்றது. தற்போதைய நிலையில் எழக்கூடிய மனிதாபிமான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் உதவும்படி செஞ்சிலுவை சர்வதேசக் குழு இலங்கை அரசாங்கத்தினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கேட்கப்பட்டிருக்கின்றது.

செஞ்சிலுவை இயக்கத்தில் உள்ள எல்லோரையும் அத்துடன் இலங்கையில் எமது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் தொடர்ச்சியான தமது ஒத்துழைப்போடு, ஈடுபாடு கொண்டவர்களையும் நன்றி கூறுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

**இசபெல் பராரஸ்**

இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி,
செஞ்சிலுவை சர்வதேசக் குழு.

(சி-6846)

# ராணுவத்தின் 14லட்சம் மிதிவெடிகள் வன்னியில் அகற்றப்படாது உள்ளன

## - கண்ணிவெடி அகற்றும் பிரிவுப்பணிப்பாளர்

வன்னி மண்ணில் இன்னமும் இராணுவத்தினரால் புதைத்துவிட்டுச் செல்லப்பட்ட 14 லட்சம் மிதிவெடிகள் உள்ளதெனஉத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் பி. யோகன் கருத்துத் தெரிவிக்கையில்; கிளிநொச்சியை பொறுத்த மட்டில் மிதிவெடி அச்சுறுத்தலில் இருந்து 90 வீதம் பூர்த்தி செய்யப் பெற்றுள்ளது மாங்குளம், நெடுங்கேணி, கனகராயன்குளம், ஆகிய பிரதேசங்களின் உட்பகுதிகளைத் தவிர ஏனைய மிதிவெடி வயல்கள் மிகுந்த அச்சுறுத்தலாகவுள்ளதுடன் குறிப்பாக மன்னார் மாவட்டத்தை பொறுத்தமட்டில் மிகுந்த அச்சுறுத்தல் நிலவுகிறது.

இரண்டு வருடங்களாக வெயில், மழை, சேறு, சகதி மு..., சுடுமணல்எனப்பாராது மனித நேய கண்ணிவெடி அகற்றும் தொண்டர்கள் இரத்தம் வியர்வை சிந்தி வார்த்தைகளால் விபரிக்க முடியாத மனிதாபிமானப் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் மனிதாபிமானப்பணியினை பலமுறை பார்த்து வியந்துமெச்சிய சர்வதேச உதவி வழங்கும் நிறுவன அங்கத்தவர்கள், உருப்படியாக எதையுமே செய்ய முன்வரவில்லையென்றார். (சோ)

# ஆ.அ. வங்கியின்முயற்சிக்கு தினேஷ் கண்டனம்

(கொழும்பு)

ஈழம்என்றநிலைப்பாட்டை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் கைவிடவில்லை என்று தினேஷ்குணவர்த்தன கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிதிகள் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட உத்தியோக பூர்வ விஜயமும் பொருளாதார உதவிகள் தொடர்பாக நடத்திய பேச்சு வார்த்தைகளும் நாட்டின் இறைமைக்கு முற்றிலும் மாறானதாகுமென்று அவர் கூறியுள்ளார்.

# கியுடெக் நிறுவனத்தின் உதவி நடவடிக்கைகள்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்நிறுவனம் அரசபாடசாலைகளில் கல்விகற்கும் 5786 மாணவர்களுக்கு இலைக் கஞ்சியினை வழங்கி வருகின்றது. இதேவேளை முன்பள்ளிகளில் கல்விகற்கும் 729 சிறார்களுக்கும் இலைக் கஞ்சியினை வழங்கி வருகின்றது.

மேலும் வைத்தியசாலைகளில் தொண்டு அடிப்படையில் சேவையாற்றுகின்றவர்களில் 55 பேருக்கு மாதம் தோறும் தலா 1000 ரூபா வீதம் வழங்கி வருகின்றது. மேலும் அரச பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களில் 80 பேருக்கு தலா 1000ரூபா வீதம் மாதாந்தம் வழங்கி வருகின்றது. முன்பள்ளிகளில் கல்விகற்பிக்கும் 17 ஆசிரியர்களுக்கும் மாதம் தோறும் தலா ஆயிரம் ரூபா வீதம் உதவு தொகையினை வழங்கி வருகின்றமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொருவிடயமாகும்.

இதனை விட வறுமைப்பட்ட மாணவர்கள் 17பேருக்கு மாதம் தோறும் 250ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவாகவும் இவ்நிறுவனம் வழங்கி வருகின்றது.

மேலும்போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, வறுமைப்பட்டவர்களுக்கு மருத்துவ பிரயாணச் செலவு.குடிசைகள் வேய்வதற்கான உதவி,சந்தர்ப்பம் சூழ் நிலைக்கேற்ப உலர் உணவு விநியோகம், முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் உள்ள அனாதை சிறுவர் இல்லத்துக்கான உதவி இவ்வாறாக கியுடெக் நிறுவனம் முல்லை மாவட்டத்தில் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கிவருகிறது. (08)

## முரண்பாடுகள்

...பம் மீதான விசாரணைகள் இவர் பற்றிய மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்தும் என்றே நம்பலாம்.

இதுஇவ்வாறுஇருக்கஇன்று இவர் மிகப்பெரும் அரசியல் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியசூழ்நிலை உருவாகி வருவதை யும் அவதானிக்க முடிகிறது.

சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது, பாராளுமன்றத்தைக்கலைப்பதானால் பிரதமரின் அனுமதி பெற வேண்டும் எனறசிலதிருத்தங்களை பாராளுமன்றத்திற்கு இம் மாதம் கொண்டுவந்து மூன்றில் இரண்டுபெரும்பான்மையைப் பெற்று அதனை நிறைவேற்ற ஐக்கிய தேசிய முன்னணி முயன்று கொண்டிருக்கிறது.

சனாதிபதியோ டிசம்பர் 5 ஆம் திகதி எப்போவரும் பாராளுமன்றத்தை கலைக்கலாம் எனக்கனவுகண்டு கொண்டிருக்கிறார். இந் நிலையில் கடந்த மே தினம் அன்று சனாதிபதி நிகழ்த்திய உரை பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளினதும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரதும்கடும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளதுடன் வெளிப்படையாகவே கண்டனம் செய்யும்அளவிற்கு நிலைமையை தோற்றுவித்துள்ளது.

இதேவேளைகட்சிக்குள்இருப்பவர்களைத்தம்பக்கம் இழுக்க ஆளும் கட்சியினர் முயன்று வருவதாகவும், இதற்கு சபாநாயகர் பதவி, அமைச்சர் பதவிகள் தருவதுடன் கோடிக்கணக்கில் பணம்தருவதாகவும், அவர்கள் ஆசை காட்டிவருகின்றனர் எனவும் இத்தகையைசலுகைகளுக்கு எல்லாம் ஆசைப்படுபவர்கள் அல்ல எமது கட்சியினர் என சனாதிபதிசந்திரிகா மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதுதெரிவித்துள்ளார்.

மேலும் போலிக்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை மிரட்டித் தம்பக்கம் இழுக்கவும் ஆளும் கட்சியினர் முயல்வதாகவும் இவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்கும் மேலாக பொது சனஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப்பதினைந்து பேரை பொய்க்குற்றச்சாட்டுக்களைச்சுமத்தி கைது செய்ய ஆளும் கட்சியினர் திட்டமிட்டுள்ளதாகவும் இதில் மங்கள சமரவீர டிலான்பெரேரா, ரெஜிரணதுங்க, பவித்திராவன்னியாராச்சி ஆகியோர்கள் அடங்குவதாகவும் இவர் 86 நாடுகளின் சபாநாயகர்களிடமும் சர்வதேச சமன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச மனிதஉரிமை அமைப்பிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் பொ. ஐ. மு. விற்குள் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே சிரேஷ்ட அமைச்சர்களுக்குள் தலைமைப் பதவிக்கான போட்டி வலுவடைந்து வருகிறது. சந்திரிகாவோ தனது சகோதரனை முதன்மைப் படுத்தி மற்றையோரை ஓரம் கட்டி விடமுயன்று வருகிறார். என மகிந்த ராஜபச வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளார்.

ஒட்டுமொத்தத்தில் இவரது தில்லு முல்லு அரசியல் மக்களுக்கு மட்டும்மல்ல அவரது கட்சியினருக்குமே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஆளும்கட்சி பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவுள்ள திருத்தச்சட்ட மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று நிறைவேறினாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

அப்படி ஓர் நிலை தோன்றுமானால் கூடியவிரைவிலேயே சந்திரிகா அரசியலில் இருந்து அனைவராலும் தூக்கி எறியப்படுவார் என்பது மட்டும் உறுதி.

## தீ நிழல்கள்

வன்னியின் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் வளச் சூழலில் இந்தத்தொகுப்பு மிகுந்த சிரமங்கள்னூடே வெளியிடப்பட்டிருககிறது. பெயர்தெரியாத கென்ய நாட்டு ஓவியரின் ஓவியத்தை கவரின் இருபக்கமும் கொண்டிருக்கும் இந்த நூல் வன்னியின் வெளியீட்டுச் செயற்பாட்டில இன்னுமொரு முன்வைத்தலாகிறது.

இந்தக் குறிப்பை எழுதி முடிக்கும்போது இன்னொன்றையும் தனியாக குறிப்பிடவேண்டியுள்ளது. நமது சூழலில் இன்று மொழி பெயர்க்கப்பட்டுவரும பிறமொழிப் படைப்புகளில் பெரும்பாலானவையும் ஒன்று அல்லது இரண்டு தசாப்தங்களுக்கு முற்பட்டவையாகவே இருக்கின்றன. சமகாலப் படைப்புகளின் அறிமுகம் நமக்கு கிடைப்பது குறைவாக இருக்கிறது. கடந்த தசாப்தங்களில் போராட்டம். போர் நடந்த எரித்திரியா, பொஸ்னியா, ஈராக், போன்ற நாடுகளின் படைப்புகளின் அறிமுகத்தை நாம் பெறவில்லை. அத்துடன் அவற்றின் புதிய வெளிப்பாட்டு, கோட்பாட்டு முறைகளையும் நாம் காண முடியாமற் போகிறது. இதற்கான பிரதான காரணமாயிருப்பது எமது சூழலுக்கு புதிய வெளியீடுகள் எதுவும் கிடைககாமலிருப்பது தான். இந்த நிலை இனியேனும் மாறவேண்டும். அதற்கு வாய்ப்புள்ளோர் உதவவேண்டும்.


★ றோயல் தயாரிப்பு பொருட்கள்
★ சன்விட்டா பிஸ்கட் வகைகள்
★ எமல்சன், எசன்ஸ் கலர் பவுடர் வகைகள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருட்கள்
★ மென்பானம் தயாரிப்புப் பொருட்கள்
★ பேக்கரி உற்பத்திக்குத் தேவையான பொருட்கள்
★ பிமல் ஆயுள்வேத அரிஸ்டம், ஆசவம், குளிசை,
★ லேகியம், தைல வகைகள் மற்றும் ஆயுள்வேத
★ மூலிகைச் சரக்குகள் என்பனவற்றை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலை பேசி இல. 021-2567.


## தாயின் பத்தாமாண்டு நினைவுக்கு மகனின் காணிக்கை



திருமதி

**கந்தையா மனோன்மணி**

புங்குடுதீவு- 1

மண்ணில் மூகிழ்வு 01 - 02 - 1902

விண்ணில் உயிர்ப்பு 30 - 04 - 1992

பெற்றாய்; வளர்த்தெடுத்தாய்
பொழுதெல்லாம் எங்களுக்காய்
சற்குருவாய், தாயாய்
சந்தனமாய் நீ கரைந்தாய்
கற்பனைக்கும் எட்டாத
காவியமே! உனைப்பிரிந்து
பத்தாண்டு போனதம்மா
பரிதவிப்பு ஆறலையே.

1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு,

மீண்டும் சந்திக்கும் வரை
உன் நினைவுடன் வாழும் மகன்
வே. க. ஏரம்பு
(இளைப்பாறிய அதிபர்)

(1827)

— கடற்கண்காணிப்பிற்கு —

# வேகப்படகுகளைப் பயன்படுத்த கண்காணிப்பாளர்கள் திட்டம்

வட-கிழக்கு கடல் பகுதிகளில் நோர்வேயுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தமது பணிகளுக்கு அதிவேக படகுகளை பயன்படுத்தவுள்ளார்கள்.

வாகரைக்கடலில்சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தே அவர்கள் இந்த முடிவினை எடுத்துள்ளார்கள்:

சிறிலங்கா அரசுடன்இந்தப் பிரச்சினை பற்றி ஆராய்ந்த தன் பின்னர்அதிவேகப் படகுகளை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் உத்தேசித்துள்ள தாக தெரியவருகிறது,

இத்தகைய அதிவேகப்படகுகளை பயன் படுத்துவதன் மூலம் சம்பவம் நடைபெறும் இடத்துக்கு துரிதமாகசென்று கண்காணிப்புப் பணியினை மேற்கொள்ள முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அதேசமயம், கடல் பகுதிகளில் அவதானிப்புப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு கூடுதலானோரை ஈடுபடுத்துவது பற்றியும் கண்காணிப்புக் குழுவினர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

## வீரவணக்கக்கூட்டமும் நடுகல் திரை நீக்கமும்

கடந்த21-10-2001முல்லை கடற்பரப்பில் சிறிலங்காகடற் படையினருடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலி 2 ஆம் லெப்டினன்ட் கனிமதி (தர்மகுலசிங்கம் சிவாஜினி முகாவில்,பளை) இவரது திருவுருவப்படம் அவரது இல்லத்தில் கடந்த திங்களன்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்து வரப்பட்டு விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் கிளி. பிரதேச மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சசி தலைமையில் வீரவணக்கக்கூட்டம் நடைபெற்றது.பின்னர்மாவீரரின்திருவுருவப்படம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரணஇராணுவ மரியாதையுடன் நடுகல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (14)

**பளையில்**

தடுப்பு நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் கிளி: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒரு பகுதி அலுவலர்களை மேற்படி பிரதேசத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொற்று நோய்த் தடுப்பு' மலேரியாத் தடை, தாய் சேய் தரிசிப்பு, உணவுச் சாலைகள் ஆய்வு, அவசர மருத்துவ சேவை, சுகாதாரக் கல்வி போன்ற நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு கிளி - முல்லை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணித்துள்ளார். (08)

**செயற்**

பங்குபற்றினர்:

ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது ஏ-9 பாதையை மக்கள் பாவனைக்கு ஏழு நாட்களும் திறந்து விடுதல், தீவுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்கு ஏற்பட்டுள்ள தடைகள், கடல் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் நடமாட ஏற்பட்டுள்ள தடங்கல்கள், மீனவர்கள் மீதான கடற்படையினரின் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் இல்லாது மீன்பிடிப்பதில் ஈடுபட ஆவன செய்தல், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறாமை என்பன குறித்து கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்த நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள், அவற்றை நீக்க உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாக அரசியல் துறைபொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கண்காணிப்புக்குழு தலைவரின் கவனத்திற்குக்கொண்டு வந்தார்.

இன்று கொழும்பு திரும்பியதும் பிரதமரைசந்தித்து கலந்துரையாடப்பட்ட விடயங்களைத்தெரிவித்து ஆக்கபூர்வ நடவடிக்கை மேற்கொள்வதாக கண்காணிப்புக் குழுத்தலைவர் தெரிவித்துள்ளதாக தெரியவந்துள்ளது; (சோ)

## சிப்பாய் படுகாயம்?

பம்பைமடுப் பிரதேசத்தில் கரடி தாக்கியதில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சிப்பாயின் மண்டை ஓட்டின் ஒரு பகுதியை கரடி சேதப்படுத்தியுள்ளது. இவர் தற்போது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளார்,

**தற்காலிக**

ஏனைய மாவட்டங்களில் தற்காலிக இணைப்புப்பெற்று கடமையாற்றி வருகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் மேற்படி ஊழியர்களை விடுவித்து உதவுமாறு கேட்டுள்ளார். (08)

**மட்டு**

பதினெட்டு முதல் இருபத்தெட்டு வயதிற்குட்பட்ட இளைஞர்கள் படையில் சேர விரும்பினால் தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றோடு செங்கலடி கறுத்தப்பாலம் படை முகாமிற்கு வந்து நேர்முகத் தேர்வில் தோற்றலாம் என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் இதற்கான ஆட்சேர்ப்பு மையம் ஆரியகுளம் சந்தியிலுள்ள நாகவிகாரையில் அமைக்கப்பட்டுள்ளது.

படைக்கு ஆட்சேர்ப்பு மையம் என பெயரிடப்பட்ட விளம்பரப் பலகையின் கீழ் படையினர் ஒருவர் அமர வைக்கப்பட்டுள்ளார்.

ஐயாயிரம் பேரை இராணுவத்துக்குச் சேர்க்கும் முயற்சியின் அங்கமாகவே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## விழி மருத்துவ இதழ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வெளியிடப்படும் மே மாத மருத்துவ இதழ் வெளிவந்துள்ளது.

குருதிச்சோகை எனும் தலைப்புச்செய்தியுடன் வாய்ப்புற்று நோய், உடலைப் பாதிக்கும் ஈய நஞ்சாக்கம், பாடசாலை மாணவர்களில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் பல சுகாதாரச் செய்திகளைத் தாங்கி மேற்படி விழி 20 ஆவது இதழ் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

**வெற்றி**

தான செயலகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சி அரசியலுக்குப் புறம்பாக இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு நிரந்தர சமாதானத்துக்கான பங்களிப்பை வலுப்படுத்துவதே இக்கட்சியின் நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சமாதான செயலக கிளைகள் வடக்கு கிழக்கிலும் நிறுவப்பட உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**இயந்திர**

கொண்ட போது அவர் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார்.

முன்னதாக வடகிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதியமைச்சரைச் சந்தித்து இந்த விடயம் குறித்து பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## தவறிவிட்டது

புதுக்குடியிருப்பு தமிழீழ போக்கு வரவுக்கழக நடத்துநரின் சிட்டைப்புத்தகம், மற்றும் ஆவணங்கள், உடுப்புகள் அடங்கிய பை (சிப்பாக்) கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப்பிற்குமிடையில் மாறிஎடுக்கப்பட்டுள்ளது. இதற்குப்பதிலாக வேறு பை எம்மிடம் உண்டு. தவறுதலாக மாற்றி எடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு போக்கு வரவுக்கழகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்,

தமிழீழ போக்கு வரவுக்கழகம்.
(சி-6850) புதுக்குடியிருப்பு.

## இப்போது வன்னியிலும்.. யாழ். வெளியீடுகள்

A/L 2002 மாணவர்களிற்கான மாதிரி வினாத் தாள்கள்.

"பொது ஆங்கிலம்"
தொகுப்பு;
த. தனேந்திரன்

"பொது சாதாரண வழிகாட்டி"
தொகுப்பு'
உமாசங்கர், கமலதாசன்

கிடைக்குமிடங்கள்:
அறிவமுது புத்தகசாலை,
பிள்ளையார் புத்தகசாலை,
கிளிநொச்சி. (1708)

## நிலாந்தனின் பரிசோதனைகள் இருநூல்களின் வெளியீடு

அடங்காப் பற்று என்றழைக்கப்பட்ட வன்னிப் பெரு நிலம் எப்பொழுதும் பகைவனிற்கு அடங்கிக் கிடந்ததில்லை,

யாழ்ப்பாணத்தரசுகள் வீழ்ந்து படும்போதெல்லாம் ஆட்சிமையம் இயல்பாகவே பெருநிலத்திற்கு நகர்ந்து விடும். அல்லது பகை சூழ்ந்த போதெல்லாம் தமிழரசின் உயிர்ச் கூட்டை பெருநிலமே ஒளித்து வைத்திருக்கும்.

அங்கிருந்து கொண்டு பகைவரின் மீது விடாதுபோர் தொடுக்கப்படும்,

போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இந்தியர் என்று படையெடுத்து வந்த எல்லாப் பகைவருக்கும் பெருநிலம் ஒரு பொல்லாத கனவாய்த்தான் முடிந்திருக்கிறது,

வன்னி மான்மியம்

யாழ்ப்பாணமே ஓ... எனது யாழ்ப்பாணமே

12 - 05 - 2002 ஞாயிறு பி.ப 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில்,
(சி-6851)

## உணவு உரிம அறிவித்தல்

2002ஆம் ஆண்டுக்கான உணவு உரிமத்திற்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 15-05-2002 இல் இருந்து 15-06-2002 வரை 35 வீதம் மேலதிக அறவீட்டுடன்உரிமத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார
சேவைகள்.
(சி-6848)

## வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு

தொழில் வங்கியில் பதிவுகளை மேற் கொண்டோரும் பதிவுகளை மேற்கொள்ளாதோருக்குமான வேலைவாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் 12-05-2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் வேலை வாய்ப்பின்றி இருக்கின்ற அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் (ஆண்கள், பெண்கள்)

இடம்-: மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு;

காலம்:- 12-05-2002
நேரம்;- காலை 10.00

குறிப்பு:- தகுதி அடிப்படையில் வேலை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதால் பிரதேச ரீதியாக முன்னர் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டோரும் தவறாது இதில் கலந்து கொள்ளவும்.
(சி-6849)


## சாவு அறிவித்தல்

### சவரிமுத்து யேசுதாசன்

[ஓய்வுபெற்ற தபால் அதிபர்]

கரம்பனைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து யேசுதாசன் அவர்கள் 08-05-2002 அன்று மல்லாவியில் காலமானார். அன்னார். புஸ்பதேவியின் அன்புக் கணவரும் விமலேந்திரன் (சுவிஸ்), தெய்வேந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி (ஜேர்மனி), நிர்மலாதேவி (சுவிஸ்) அமலேந்திரன் (பேராதனைப் பல்கலைக் கழகம், பொறியியல் பீடம்), குபேந்திரன் (மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், சுதர்மன, வசந்தி, தவறாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ராறா, நிசாந், வஜீபன், நிதுசன், ரஜிபனா, கிருயா, ஆகியோரின் அனபுப் பேரனும் சேவியர், தாசன். ஜேமிஸ், மரியதாசம்மா, அன்ரனிதாசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-05-2002 நாளை காலை 9 மணியளவில் மல்லாவியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்;
யே. அமலேந்திரன்
(1766) (மகன்)

இப்பத்திரிகை கிளிநொச்சி, ஈழநாதம் பணிமனையில் 2002 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.